உ

சிவமயம்

தாயுமானர் திருவாக்கு

(சுருக்கம்)

" தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லா
ரவஞ் செய்வா ராசையுட் பட்டு. "

– பொய்யாமொழி

" காடுங்கரையு மனக் குரங்கு
கால் விட்டோட வதன் பிறகே
ஓடுந் தொழிலாற் பயனுளதோ
வொன்றுய்ப் பலவா யுயிர்க்கு யிராய்
ஆடுங் கருணைப் பரஞ்சோதி
யருளைப் பெறுதற் கன்புநிலை
தேடும் பருவமிது கண்டீர்
சேர வாருஞ் செகத்தீரே "

–தாயுமான சுவாமிகள்

" Mortals, your end is beatitude, repture eternal His meaning. "

–Sri Aurobindo

1891
உ
294.5
தாயுமா

85367

உ
சிவமயம்

தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு

வாழ்த்துரை

தாயுமானசுவாமிகள் அநுபூதிமான், முறையாக குரு உபதேசம் பெற்றவர். திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பவரே இவரை ஆன்மீகவழியில் அநுபூதிபெற வழிப்படுத்தியவர் என்பது, இவர் பாடலால் தெரியவருகின்றது. இவர் உலகத்தில் இருந்தார் உலகத்தைத் தம்முள்வைக்கவில்லை. அறிவிற் சிறந்தார். அன்பில் நிறைந்தார், எல்லாம் சிவமே எனக்கண்டார். உடல் பொருள் ஆவி எல்லாம் சிவனுக்கே என அர்ப்பணம் செய்தார். திருவருள்விலாசப் பரசிவவணக்கம் ''அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய், என்று தொடங்கி கிட்டத்தட்ட 1460 பாடல்கள் வரை பாடியருளினார். ஒவ்வொரு பாடலும் நெஞ்சை உருக்கும் தன்மையன. படித்துப்பார்த்தால் இவ்வுண்மை விளங்கும்.

எல்லாப் பாடல்களையும் படிக்க வாய்ப்பில்லாதவர் சில பாடல்களையாயினும் படித்து இன்புற்று நற்கதிபெற வேண்டும் என்று உள்ளம் கொண்டார் ஒருவர்.

அவர் யாவர் எனில்

தாயுமான சுவாமிகளிடத்திலும் அவர் அருளிய பாடல்களிலும் அதிகம் ஈடுபாடுடையவர், மலேயாவில் தமது உத்தியோக காலங்களிலும் ஓய்வு நேரமெல்லாம் தமது சிந்தனை யெல்லாம்

தாயுமானவரிலும், அவர் பாடலிலுமே செலுத்தும் இயல்பினர். தாம் வசிக்கும் இல்லத்துக்கே தாயுமானவர் இல்லம் எனப்பெயர் வைத்திருப்பவர். நல்லோர் தெய்வநெறி நிற்கும் பெரியோர் இவர்களைக் கண்டால் அகமுகமலர்ந்து பற்றிக் கொள்பவர் அன்பிற்சிறந்தவர். இத்தகைய பெரியார் காரைநகரில் தாயுமானவர் இல்லத்தில் வசிக்கும் சைவத்திருவாளர் மு. கு. சுப்பிரமணியம் என்னும் பெயருடையார் ஆவர். இவர் தாம் படித்து இன்புற்று சில பாடல்களைத் திரட்டி தாயுமானவர்,

(திருப்பாடற்றிரட்டு)

என்ற பெயருடன் அச்சுவாகனம் ஏற்றி எல்லோரும் படித்து இன்புற உதவி உள்ளார்.
இந்த செயலில் ஈடுபட்டு,

"தாமின்புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

எனும் பொய்யாமொழிக்கு

இலக்கியராய் விளங்குபவர் இத்தகைய நல்ல தொண்டுகளை மேன்மேலும் செய்து அன்பும் அருளும் உடையவராய் எல்லாச் செல்வ நலங்களும் பெற்று இனிது வாழ அருள் புரிய வேண்டும் என்று அம்மையப்பர் திருவடிக்கமலங்களை இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்
புலவர், த. குமாரசுவாமிப்பிள்ளை
2-2-67

உயர்திரு. த. குமாரசுவாமிப் புலவரடியர்

'கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅ ரெனின்."—பொய்யாமொழி"

இந்நூலைத் தமியேன் வெளியிடப் பிழைகளைப் பார்வை செய்து நேர்ப்படுத்தியும்; இதற்கு மதிப்புரையைக் கேளாமலே அன்புகொண்டு தந்து ஆசீர்வதித்தும்; ஆண்டுதோறும் தாயுமானசுவாமிகளின் குருபூசை நன்னாளில் சைவசித்தாந்தசாராம்சத்தை இனிமையாயும், மனதை வசப்படுத்தக்கூடியதாயும், தெளிவாய்த் தெள்ளுதமிழில் வழங்கி வந்தவரும், தமது சீவியகாலம் முழுவதும் சைவசமயப் பிரசாரத்தை தமது 'சுயதர்மமாய்க்' கொண்டு வருவித்து வருபவருமாகிய உயர்திரு. த. குமாரசுவாமிப் புலவரடியர்க்கு அடியேனும், சைவ உலகும் என்றும் கடப்பாடுடையோம்.

அடிகளின் பெருமை அருமைகளை தமிழுலகமறிந்ததே. தமியேன் எடுத்துரைக்க வேண்டியதில்லை. அகந்தை, மமதை விரிந்து மலிந்த இக் கலிகாலத்தில் இவர்களைப்போல் அன்பும், பணிவும், இன்சொல்லும், நேர்மையும் சமயப்பணி ஆவலும், சைவசமய ஞானமும், சைவநெறியைக் கடைப்பிடிக்கும் சிவபூசாதுரந்தரரைத் தமியேன் கண்டதில்லை. இவர்களைத் தமியேனின் நன் ஆசிரியராய் விளங்கிய பேராசிரியர் உயர்திரு. சிவபாதசுந்தரனாருடனுடன் ஒழுக்கத்திலும், ஞானத்

திலும், சைவப்பக்தியிலும் சமயப்பணியிலும் ஆற்றலிலும் ஒப்பிடலாம்.

"பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து."

மந்திரங்கள் இரகசியமானவை. இவைகளைப் பிரசார நூல்களில் வெளிப்படுத்தக் கூடாதென்பது உயர்திரு. த. குமாரசுவாமிப் புலவரடியரின் விளக்கம். இந்நூலில் தரப்பட்ட பஞ்சாட்சர விளக்கத்தைத் தமியேன் சிவானந்த சரஸ்வதி அடிகளாரால் அருளிய "சிவவழிபாடு" என்னும் ஆங்கில நூலில் இருந்து தரப்பட்டுள. சிவானந்த அடிகளும் குருமூலம் மந்திர தீட்சை பெறுவது நலம். அப்படியானால் குரு, மந்திரத்துடன் தமது அருளையுஞ் சேர்த்துத் தருவதால் மந்திரசக்தி கூடும் என்னுங் கருத்தைச் சிவானந்த அடிகளும் குமாரசுவாமி அடியரைப் போல் உடையவர்கள்.

சிவானந்த அடிகளைப்போல், இவர்கள் காலத்தில் விளங்கியவர்களும், மிகச்சமீபத்தில், சிவானந்தஅடிகளின் பின்பு மகாசமாதி அடைந்தவர்களுமான சுவாமி ராம்தாஸ், சாதுவஸ்வானி அடிகளும் தங்கள் வெளியீடுகளில் மந்திரங்களை வெளியிட்டுள்ளனர்கள் உலக சேமத்துக்காய். கடவுள் நோக்கத்தைக் கருதுபவரே அன்றிக் கர்மத்தைக் கவனிப்பவரல்ல. கிறிஸ்துநாதர் அருளியதுபோல் 'விதையை விதைப்போம்; பயன் படக்கூடிய இடத்தில் அது பலனை நல்கி உய்விக்கட்டும்!" என்று விளங்கிக் கொண்டு உயர்திரு. குமாரசுவாமி அடியரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் அடியேன்.

மு. கு. சுப்பிரமணியம்
22-1-67.

உ

சிவமயம்

தாயுமானர் திருவாக்கு

முகவுரையும், பதிப்புரையும், மந்திரசெப விளக்கமும்

"காகமுறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகாரசிவ
போகமெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே."

—தாயுமான சுவாமிகள்

சைவசமய ஞானம் இல்லாத வாலிபர்கள் "கோவிலுக்குப் போக வேண்டுமா? கடவுளைக் கும்பிட வேண்டுமா? நாம் பாவமான காரியங்களைச் செய்யாதிருந்தாற் போதாவோ?" என்று வினவுகிறார்கள்.

சிவபோத வியல்பு

எங்களின் மனதைப் படம் பிடிக்கக் கூடிய ஒரு கருவி இருந்தால், அதால் நம்மனதைப் படம் பிடித்துப் பார்த்தால், நாமே நம் மனமாசுகளை- ஆணவம், கன்மம் மாயைகளைத் தெரிந்து தலைகுனியத் தயங்கோம்;* 'கொலைகள் எத்தனை, கோரமெத்தனை, வன்குணங்களெத்தனை, கொடியபாழ்ங்கல்லாமை யெத்தனை, அகந்தை எத்தனை, மனக்கள்ள மெத்தனை, உள்ள சற்காரியஞ் சொல்லிடினு மறியாமை எத்தனை, கதிக்கென்றமைத்த வழியிற் செல்லாமை எத்தனை விர்தாகோஷ்டி என்னிலோ செல்வதெத்தனை முயற்சி" ஆகிய இவை "நம் மனதை மாசாக்குகின்றன என்றுணர்ந்து தலைகுனிவோம்.

* கொல்லாமை என்ற பாடலைப் பார்க்கவும்.

பட்டினத்தடிகளும்--

"சொல்லால் வருங்குற்றம் சிந்தனை
யால்வரும் தோஷம்செய்த
பொல்லாத தீவினை பார்வையிற்
பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந்
தீங்குக ளாயவுமற்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்
வாய்கச்சி யேகம்பனே."

என்று இறைவனை "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம் ஆகுல நீரபிற" என்று கருதிவேண்டி நின்றார்கள்.

பாவஞ்செய்பவனும் தான் பரிசுத்த மானவனென்று தான் சொல்ல விரும்புகிறான். ஏனெனில் அவனின் உண்மையான ஆன்மா பரிசுத்தமானதுதானே. இவன் தன்னை உடம்பென்று மித்தையாய்-மாறாய் விளங்கிக்கொள்வதாலும், பழைய புதிய கன்ம வாசனைகளாலும் உந்தப்பட்டுப் பாவமான கர்மங்களில் ஈடுபட்டு மேன்மேலும் வாசனைகளைப் பெருக்கி அதை வலுக்கச் செய்கிறான்.

வாசனை

வாசனைகள் இப்படி வருகின்றன.

நாம் பாவமான அல்லது புண்ணியமான காரியங்களை பல பிறவிகள் தோறுஞ் செய்யச் செய்ய இக்காரியங்களின் அதிக சார்பு உண்டாகிறது. இவை நாளடைவில் குணமாகிறது. இக்குணங்கள் படிப்படியாய் சித்தத்தில் படிந்து வாசனை ஆகின்றன. நாம் பேசுவன, சிந்திப்பன, செய்வன ஒன்றும் அற்றுப் போவதே இல்லை: இவை சித்தத்தில் பாட்டுத் தட்டில் ஒலிபதிவது போலப் பதிகின்றன; இச்சித்தப்பதிவால் தான், நாம்

நாம் செய்வனவற்றை ஞாபகப்படுத்தக் கூடியனவாய் இருக்கின்றன. இப்பதிவைத் திருவருட் சத்திதான் செய்கிறது. இஞ்ஞாபகசக்தி இல்லாவிட்டால், நாம் குறித்தறிந்தனவற்றை ஆய்ந்து, இதம் அஹிதம், உண்மை பொய், நயம்நட்டம், இன்ப துன்பம், உய்விப்பது கெடுப்பது ஆகியவற்றை அறிந்து நன்னெறிநிற்கவும் முடியாது.

கனா

நாம் உறங்கும் போதுகாணும் கனாத் திரைப்படங்களும் இச்சித்த வாசனையில் இருந்து உருவாகிறது. அப்போது சிற்றறிவு தொழிற்படுவதில்லை. நல்ல உறக்கத்தில் உயிர் ஆனந்தமய கோசத்தில் உறங்கிக் கிடப்பதால் நல்ல ஆறுதலை அடைகிறது. கடும்நோயாளனும் இவ்வுறக்கத்தில் நோயின் துன்பத்தை நோயாளி அறியாத பெரும் ஆறுதலை அடைகிறான். விழிப்புண்டானதும் உயிர்மனதையும், இந்திரியத்தையும், உடலையுஞ் சார்ந்திருப்பதால் உலக ஆசைகளால் வருந்துன்பம், நோய்களின் துன்பத்தையும் அடையப்பெற்று மனிதன் வருந்துகிறான்.

விழிப்பு

உன்றாவெளியாய் உறங்காத பேரறிவாய் எம் அறிவுக்கு அறிவாய் உள்ள இறைவன் விழிப்பில், "நீ நல்ல நித்திரை கொண்டாய் அல்லது நீ கெட்ட கனவைக் கண்டு, இன்பமோ, அல்லது துன்பமோ அடைந்தாய்" என்று உனக்கு அறிவிக்கிறார்;

கனவிலும், உனது உறக்கத்திலுஞ் சாட்சியாய் இருந்து அறிவித்த நினைவுக்கெட்டாத சிற்றம்பலவன் தான் எங்களுக்குள் உயிர்க்குயிராய் உள்ள பேரறிவு. விரிந்த மனமொடுங்கும் வேளையில் தாமாகப் பரந்த அருள் தான் நித்திரையில் சாட்சியாய் உறக்கமற்ற பரமாத்மா-பேரறிவு.

சமாதி

சமாதி விழிப்பில் உறக்கம்:-

தூங்கிவிழித் தென்னபலன் தூங்காமற் றூங்கிநிற்கும்
பாங்குகண்டா லன்றோ பலன்காண்பேன் பைங்கிளியே;

ஆங்கார மற்றன் அறிவான அன்பருக்கே
தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே:
—தாயுமானூர்

ஒருமனப்பட்ட: எள்ளளவும் மனம் ஆனந்தமான இறைவனைத் தவிர வேறொன்றையும் நினையாத மனத் தியானத்தால், தியானிப்பவனும் தியானிக்கப் பட்ட பொருளும் ஒன்றுகிறது. இத்தியானமும், ஒருமைப்பேறும் திருவருளில்லாது வராது.

"கண்மூடிக் கண்விழித்துக் கண்டதுண்டோ நின்அருளா
விண்மூடின் எல்லாம் வெளியாம் பராபரமே." [ம்
—தாயுமானூர்

போகசீவியம் † விழிப்பில் கனு. இது சிவபோதமற்றுச் சிவபோதம் உதயமாக அற்றுவிடும்.

வாசனைகள் முத்தியில் அறும்

ஆகையால் நம்நிழல் நம்மைவிட்டு நீங்கினாலும் நம் வினைகள் நம்மைவிட்டு நீங்காது. உடல்தான் இறக்கிறது, ஆன்மா சூக்கும தேகத்துனும் இருவினைப் புண்ணிய பாவச் சித்தமலப்படிவுடனுஞ் செல்கிறது. சித்த மலமற்றுச் சிவபோதம்-பேருணவு உண்டானால் தான் முத்தி-மனஇந்திரியக் கட்டுப்பாட்டின் இருந்து விடுதலைபட்டுச் சொல்லால் அடங்காச் சுகக்கடலில் அழுந்தல்.

"காண்பானும் காட்டுவதுங் காட்சியுமாய் நின்ற
வீண்பாவம் போயதுவாய்" நிற்றல்;

† மின்னனைய பொய்யுடலை என்ற பாடலைப்பார்க்கவும்.

"ஐசுவரியவானும், ஐசுவரியமும், ஐசுவரிய இன்பமும் ஐசுவரியவானுக்கு வேறானவை அல்ல" என்று உணர்தல்; சிற்றின்ப சுகம் ஆன்மாவில் உள்ள பேரானந்தத்தில் ஒரு துளி, சிற்றின்பப் பொருள் எதுவுக்கும் இன்பமில்லை. நாய் எலும்பைக் கடித்தால் அதன் முரசின் இருந்து வரும் இரத்தந்தான் அதற்கு இன்பத்தைக் கொடுக்கிறது. ஆனால் நாய் அறிவீனத்தால் எலும்பின் சுவை இருப்பதாய் விளங்கிக் கொள்கிறது.

சித்த வாசனைக்கேற்றதே நம் தேகம், உணர்வு, குணம், மனச்சார்பு, மனத்தெளிவு, பலாபலன், இன்ப துன்பம், இறப்புப் பிறப்பு, சாதி, சமயம், † ஊர், தொழில், நட்பு, உற்றார் உறவினர் மனைவி மக்களு

அறம்

ஆகையால் எங்களை ஆக்குவதும் அழிப்பதும் நாம் செய்யும் கர்மங்கள்தான். ஆகையால் அறமான புண்ணியமான (Positive) காரியத்தைச் செய்ய வேண்டும்; மறமான தீமையான (Negative) காரியத்தை நினைக்கவுங் கூடாது; செய்யவுங் கூடாது; மறந்துஞ் செய்யவுங் கூடாது.

"அறத்தினு மாக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லைக் கேடு."

"செயற்பால தோரு மறனே ஒருவர்க்
குயப்பால தோரும் (விடப்பட வேண்டியது) பழி"

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினு மஞ்சப் படும்"

"தீயவை செய்தார் கெடுதல் தன்னிழல் தன்னை
வீயா தடியுறைந் தற்று." —பொய்யாமொழி

† ஊர் அனந்தம் என்னும் பாடலைப் பார்க்கவும்.

அறமான காரியங்களை மனதைத் தீயவழிகளிற்செல்லவிடாது கட்டுப்படுத்திச் செய்வது ஒரு சாமானியமான காரியமல்ல. எங்களின் இந்திரியத் தொடர்போ பல்லூழி காலமாய் உள. மனிதராய் உருவெடுத்தவர்களும்,

"காயம் யாதேனுமொரு சித்திபெறச் சீவன்முத்தி
ஆகுநெறி, நல்லநெறி" என்றுணர்ந்து முத்தி

நெறி நிற்பவர்கள் கோடானுகோடி பேரிலே ஒரு சில ஆயிரம்பேர் இருப்பார்கள். இவர்களில் ஒரு சிலரே சீவன் முத்தி அடைபவர்கள்.

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

என்ற வேதவாக்கு: மேலோர் யோக வாழ்க்கையைக் கடுமையானதென்று மனஞ்செல்லும் வழிபோகாது அறவழியில்

தாயுமானார், அப்பர் போன்று நின்று ஒழுகிச் சொல்லால் அடங்காச் சுகக்கடலில் வாழ்வர்: அதிமனிதராய் என்ற கருத்தை உடையது.

வலியது அருளே

உடம்பிலும் பார்க்க மனம் வலிமை உடையது; மனத்திலும் பார்க்க அறிவு அதிக பலமுடையது. அறிவிலும் பார்க்க அருளின் வலிமை அளப்பில. இதனாற்றான் தாயுமானசுவாமிகளும்:

"பொய்யுலக வாழ்க்கைப் புலைச்சேரி வாதனைநீள்
மெய்யருளின் மூழ்கின் விடுங்காண் பராபரமே."

என்றியம்பியது. இதனால்தான் தேவரும்:-

"பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார் (அழிந்து போனவரே) மாற்றுதல் அரிது"

என்று சொன்னதும்

பஞ்சாட்சர செபம்

சாதனை இல்லாது எதையுஞ் சாதித்துவிட இயலாது போக-இந்திரிய சுகங்களை நீக்கி, யோகநெறி நின்று திருவருட் பலத்தைக் கொண்டு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தத்தைப்பெற மந்திரயோகம் தலைசிறந்தது.

"ஐந்தெழுத்தின் உண்மை அதுவான அப்பொருளை
நெஞ்சழுத்தி ஒன்றாகி நிற்குநாள் எந்நாளோ."

—தாயுமானார்

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பதும்
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதநாம நமச்சி வாயவே."

— திருஞானசம்பந்தர்

(ஒன்றாகி-நான் நீ என்ற சுட்டறிவு நீக்கி எல்லாவற்றையும் "காட்டுந்திருவருளே கண்ணாகக் கொண்டு ஒன்றாய் உணர்தல். எப்பொருளும் நீயெனவே எண்ணி நான் தோன்றாத சிவபோதத்தில் அழுந்தல்.)

"முத்திபஞ் சாக்கர முறைமையி லயிக்கியஞ்
சத்திய மிதுவெனச் சாந்தவர்க் குரைத்தோன்
அஞ்செழுத் துள்ளே யனைத்தையுங் காட்டியென்
னெஞ்சழுத் தியகுரு நீதிமா தவன்.

(அருள்வாக்கிய அகவல்)

"Question: What happens when the human consciousness is replaced by the divine?"

"Answer; One feles perpetual calm, perpetual strength, is aware of infinity, lives in"

eternity. Everything becomes manifestation of Brahman. For instance, as I look round the room I see everything as the Brahman. It is not thinking, it is a concrete experience, even the wall, the book is Brahman. I see you not as X but as a divine being in the Divine. It is a wonderful experience''

Sri Aurobindo. I–I–39.

Life Of Sri Aurobindo: page, 192.

வினா: மனித சிற்றுணர்வு (அறிவு) பேருணர்வால் (சிவ போதத்தால்) திரும்ப ஸ்தாபிதம் பெற்றால் என்ன நிகழ்கிறது?

விடை: பேருணர்வு பெற்றவருக்கு: நித்திய சாந்தம், நித்திய ஆத்மீக பலம், எல்லை அற்ற சிற்றம்பல உணர்வு, தெய்விக சீவியம் உண்டு. சர்வமும் பிரமாவின் விளக்கமாய்த் தோன்றும். (எப்பொருளும் நீயெனவே எண்ணி நான் தோன்றாதநிலை) இது. அநுபூதி உணர்வு. இவ்வறையை நான் சுற்றிப் பார்க்கும் போது இச்சுவர், இப்புத்தகமெல்லாம் சிவமயமாய்த் தோற்றுகிறது. வேலனாகிய உன்னை வேலனாய் அல்லப்பார்க்கிறேன். தெய்வத்துள் நான் நீ அற்ற தெய்வமனிதனைக் காண்கிறேன். இது ஒரு அற்புதமான அநுபூதி.

''குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலுஞ்
செறிவற் றுலகோடுரை சிந்தையுமற்
றறிவற் றறியாமையு மற்றதுவே.''

—கந்தர் அநுபூதி

அறுவகைப் பஞ்சாட்சரம்

ஸ்தூல பஞ்சாட்சரம்:- ''நமசிவாய.''
சூக்கும பஞ்சாட்சரம்:- ''சிவாயநம''
காரண பஞ்சாட்சரம்; ''சிவாயசிவ.''
மகாகாரண பஞ்சாட்சரம் ''சிவாய.''
மகாமனு அல்லது முத்திபஞ்சாட்சரம்: ''சி.''

சிவாயநம-சிவபெருமானுக்கு வணக்கம்
தேகதிருஸ்டிப்படி சீவன் சிவத்தின் அடிமை.

நம-சீவாத்துமா, சிவ-பரமாத்துமா. அய- ஐக்கியம். சீவாத்துமாவும் பரமாத்துமாவும் ஒன்று.

ஆகையால் ''ஓம் ந:சிவாய நம'' ''தத்துவமசி''-அத்-துவம்-அசி. ''அதுநான்'' என்ற வேதாந்திகளின் மகா வாக்கியத்தைப் போன்ற ஒரு பெரிய வாக்கியம்.

தான் உடல் என்பது பெரும் அஞ்ஞானம்; இப்பெரும் பாவமான விளக்கத்திலிருந்துதான், நான் எனது என்னுஞ் சிந்தனையும், இதனோடு சம்பந்தப்பட்ட எல்லாப் பாவங்களும் எழுகின்றன, நீ அல்லும் பகலும் அநுதினமும் ''நான் தெய்வ'' மென்ற ஞான பஞ்சாட்சரத்தை நெஞ்சில் ''செப்புவ தெல்லாஞ் செபநான் சிந்திப்பதெல்லாநின் ஒப்பில் தியானமென வோர்ந்தேன் பராபரமே.,'' என்று வழுத்திவா; நீ தெய்வப் பிறப்பைச் சட்டை ஒத்த இவ்வுடலைதள்ளுமுன்னே ''எடுத்துச் சகசநிட்டையைப் பெற்று நிர்விகற்பக் காட்சியைத் தாயுமானசுவாமிகளைப் போல் எடுப்பாய். எதை நீ நினைக்கிறாயோ நீ அதுவாவாய் † ''சிவ சிவ என்கிலர் தீவினையாளர், சிவ சிவ என்றிடத் தீவினை மாளும், சிவ சிவ என்றிடத் தேவருமாவர், சிவ சிவ என்றிடச் சிவகதி தானே'' என்றார் ''சக்கரவர்த்தி தவராசயோகியெனுமிக்க திருமூலரும்.''

† ''வேதமுதல் ஆகம'' மென்ற பாடலைப் பார்க்கவும்.

ஓம்-பிரணவம். பதி, பஞ்சாட்சரம்-பசுரூபம்; பிரணவமும், பஞ்சாட்சரமும் ஒன்று. ஐந்து எழுத்தும் ஐந்து கிருத்தியத்தை விளக்கும், ந-திரோதான சத்தி-மறைக்குஞ்சத்தி ம-மலம், சி-சிவம், வ-அருட்சத்தி, யா-ஆன்மா.

சாதனையை உள்முகமாய், மலர்மிசை ஏகினான் மாணடிக்குச் செய்ய வேண்டும். மனம் வெளியே ஓடினால் துன்பம், உள்குவிந்து மௌனமுற்றால் பேரின்பம்; ஓடும் மனம் பிடித்துக்கொள்ள "ஓம்" என்னும் இலட்சியத்தை மனதில் நிறுத்தித் தியானத்துடன் 'ஓம்சிவாயநம'' வைஒது. மனம் ஓடி வெளியே போனால் மனதை அவ்விலச்சியத்துக்குக் கொண்டு வந்து நிறுத்து.

மனத்தால் மந்திரத்தைச் செபித்தால் மிக்க சத்தி வாய்ந்ததாய்ச் செபமிருக்கும். இதை மனச் செபமென்பது;

சொல்லிச் செபிப்பதை வைகரிச் செபமென்பர், குசுகுசுவென்று வாய்க்குள் அடக்கிச் செபித்தலை உபம்சுச் செபமென்பர். இம்மூன்று வகையாய்ச் செபித்தால் மனச்சலிப்பு வராது. செபத்தை நாள்தோறும் இருக்கும் போதும், வேலைசெய்யும்போதும் இடைவிடாது, கடவுட் தியானத்துடன், கருத்தாய்க், கிரமமாய்ச் செய்ய வேண்டும். வீட்டுக்குத் தாரமான பெண்மணிகள் மனசிக செபத்தைச் செய்ய வேண்டும், சதாநிஸ்டனும் இரு உருவேறத் திருவேறும். கொலை, களவு, கள், காமம்- கோபம் விடப்பட வேண்டும் கடவுள் குருவர்க்கு திருஅருள் ஆகியவற்றில் நம்பிக்கையும் வேண்டும்.

—சிவானந்த அடிகளின் விளக்கம்

அடியார்கள் திருவாக்கு

கடவுள் அடியார் மூலமாய்த்தான் தமது அருளாணையைப் பரப்பி உலகை அறவழிநிற்கச் செய்து

உய்விக்கிறார்; தாயுமானார் பாடல்களும் இருவருட்சுரங்கம் இப்பாடல்களைப் படிக்க மனச்சோர்வு வராது; மேன்மேலும் அருட்தாகமுண்டாகும்;

''பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும் பொய்யெனவே
மெய்யநினை மெய்யெனவே மெய்யுடனே காண்பேனோ.''

என்னும் விறும் உண்டாகும்.

கவியோகி சுத்தானந்த பாரதியார் தமியேனுக்குச் சொன்னார்கள்:- ''எந்தத் தத்துவசாஸ்திரமும் திருமூலர் திருமந்திரத்துக்கு இசைவுடையதாய் இல்லையோ அதைத் தத்துவ சாஸ்திரமாய் எடுக்கக் கூடாது. எந்த நூலில் தத்துவசாஸ்திரமில்லையோ அதையோக நூலாய் எடுக்கக் கூடா''தென்று. ''தத்துவ சாஸ்திரங்களின் அளவு நூல் திருமூலர் திருவாக்கு'' என்றார்கள். தாயுமானார் திருவாக்குத் திருமூலர் மரபின் வந்த சிரஞ்சீவி. கீதை, உபனிடதங்களைப் போன்ற அரிய யோகநூல். யோகத்தில் முற்றிப் பரிபூரண நிலையை இம்மையில் அடையாவிட்டாலும் ''வெந்து வெடிக்கின்ற சிந்தை வெப்பகல''த் தண் அமைதியை, ஆறுதலை; கடவுள், ஆன்மபலம்; திருவருளாகியவற்றில் நம்பிக்கை, பொறுமையைக் கொடுக்கக்கூடிய தோழன், தாயுமானார் திருவாக்கு. இதில் உள்ள பராபரக் கண்ணிகள் சிவப்பிரம ஐக்கிய திருக்குறள் எல்லாம்;

இவற்றைப் படித்துப் பிள்ளைகளைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டி நித்திரையாக்கலாம். இப்பிள்ளைகள் யோக நாட்டமுள்ளவராய் வளர்வர். கடவுளை உள்நாடித் தியானித்து மனதை ஆற்றலாம்; ''உன்னுவெளியாய் உறங்காத பேருணர்வாய் என் ஆவிக்குள்ளே இருந்தாய் பராபரமே.'' போன்ற கண்ணிகள் தியானத்துக்குரியவை. கடவுளையும் தோத்திரிக்கலாம். நல்ல விளக்கத்துடன் பாமரசனங்களும் பிள்ளைகளும், விளங்கி ஓதக்கூடிய ஒப்புவமை அற்றகண்ணிகள். இதில் உள்ள இனித

கன்னிகள் தலைசிறந்த அகத்துறைப்பாடல்: இவற்றை ஓதும் கன்னிகள் தலைசிறந்த தாயுமானவரைப் போன்ற கணவரைப்பெறுவர். இவற்றை ஓதும் வாலிபர்கள் மட்டுவார் குழலி போன்ற தெய்வப் பெண்களை நாயகிகளாய் பெற்று இல்லற யோகிகளாவர்.

சுவாமி சிவானந்த அடிகள் அருளிச்செய்த "இமயத்திருவாக்கு" என்னும் நூலில் 120-ம் பக்கத்தில் மேல்நாட்டுத் தத்துவசாஸ்திரங்கள் காட்டுந் திருவருளை கண்ணாகக் கொண்டு வராமையினால் பூரணமுடையன வல்லவென்று சொல்லி உள்ளார்கள்

"Without the philosophy of intution, the philosophy of the west is bound to remain imperfect"

"The scientific attempts to prove the infinice are futile. The only scientificmethod hereis intution"

தாயுமானார் திருவாக்கைச் சிரமேற்கொள்ள நாம் எவ்வளவு பெருமையும் புகழ் உள்ள பூரணராயும் விளங்க வேண்டும்!

உயர்திரு. க. இராமச்சந்திரன்

இதில் சேர்க்கப்பட்டுள்ள "தாயுமான சுவாமிகள் திருவரலாற்றுச் சுருக்க விளக்கம்" உயர்திரு: க. இராமச்சந்திரனால் தரப்பட்டுள. இப்பெரியார் சைவ வேளாள மரபைச் சேர்ந்த சிவபத்தன்; சிவதொண்டன் ஊர், பேர், சாதி, சமயங் கடந்த சமரசி; "சமயமஞ்சரி" "ஆத்மசோதி" ஆகிய திங்கள் வெளியீடுகளின் பத்திராதிபர் இவர் இளம் பராயத்திலேயே தமது தயாருடன் இருந்து நயினாதீவிலுள்ள இவர்களின் பரம்பரைக் குகன் கோவிலில், நள்இரவில் கோவில் பூட்டப்பட்டிருந்தபோது முருகப் பெருமானின் தரிசனையைப் பெற்ற சிலர், இவர்களால் யாத்த "மெய்யடியார் நட்பு மஞ்சரி" என்ற அரிய ஆங்கில நூலைப் படிக்கவும்.

"தானந்தவம் தருமஞ் சந்தமுஞ் செய்வர்சிவ
ஞானந்தனையனைய நல்லோர் பராபரமே"

என்னும் தாயுமான சுவாமிகளின் திருவாக்குக்கிசைவுடைய நல்லார்; அன்பும் பணிவும், ஊக்கமும், நுண் அறிவும், சமரசமனப்பான்மையும்; இக்கால அடியார்களுடனிருந்து அவர்களின் நட்பையும், ஆசீர்வாதத்தையும் பெற்ற ஒருவர். பல நாடுகளுக்குஞ் சென்று சமரச சன்மார்க்க போதனை செய்தவர்; செய்தும் வருபவர் பல சமய ஆராட்சியாளர். தாயுமான சுவாமிகளின் திருவாக்குகளுக்கு இளம் பராயந்தொட்டே மனதைப் பறிகொடுத்தவர். தமிழரின் பண்பாட்டில் பிறந்து, வளர்ந்து, படித்து, அருட்பணி செய்யும் அரும் பெரும் தமிழன்.

"மகன் தந்தைக்காற்று முதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ் சொல்"

என்னும் வேதவாக்குக்கு இலட்சியமாய் உடையவர்கள் இலர்கள் எலலா வல்ல இறைவனின் திருவருளை மேன்மேலும் பெற்று நீடித்த அருட்பணியைச் செய்ய, நல்ல சுகபலத்தையும், நுண்அறிவையும், பேராற்றலையும் பேரின்ப சுகத்தையும் இறைவன் அடிகள்மேல் அருள் மழையைப் பெய்து அவர்களை ஆசிர்வதிப்பாராக! தமியேனின் நன்றி இன்றும், என்றும் உரித்தாகுக அடிகளுக்கு.

இவர்களால் யாத்த "மெய்யடியார் நட்பு மஞ்சரி" என்ற அரிய நூலைப் பார்க்கவும்.

கவியோகி

இதில் உள்ள "தாயுமானர் உலகவேதம்" என்ற பாக்கள் மகாஇருஷி சுத்தானந்த பாரதியாரின் அருள் வாக்கு: இவை தாயுமானார் திருவாக்கை விளக்குகின்றன, தாயுமானார் வேறு திருப்பாடல்கள் வேறல்ல

இரண்டும் ஒன்று: சூரியன் வேறு சூரியஒளி வேறல்ல, இவ்விரண்டும் பிரிக்க முடியாத ஒன்று.

பொருளுடையோரைச் செயலிலும் வீரரைப்போர்க்
[களத்துந்
தெருளுடையோரை முகத்திலுந்தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடையோரைத் தவத்தில் குணத்தில் அருளிலன்பில்
இருளறுசொல்லினுங் காணத்தகுங் கச்சியேகம்பனே.

— பட்டினத்தடிகள்

கவியோகிகளும் திருமூலர் மரபில் வந்த திருவருட் செல்வர். அடிகளின் மேன்மையைச் சிவானந்த அடிகளாரின் திருவாக்கால் அறிந்து கொள்க:-

"Sri Shuddhananda Bharathiyar is born with a lyrical gift, and displays a loftiness of sentiments and soul thrilling spiritual experiences that are couched in a language of rhythim, melody and music. To those who are familiar with Sri Bharathiyar's Magnum Opus, Bharata Shakti nothing need be said of the greatness of soul that is manifest in him. Continuous secvice, sracrifice austarity, meditation, yoga, silence, writing of poetry, these are the magnificent facets of the epic life of Maharshi Bharatiyar, the superman who in India the symbol of Spiritual Force and desires to make yoga sadana a national discipline."

— Voice of Thayumanar.

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் ஒரு பிறவிக்கவி. சந்தமும், இசையும், பண்ணும் கொண்ட உயிரை உருக்கும் அநுபூதி மொழியால் உயர்ந்த கசிவான தத்துப் பொருட்களை அடிகள் வெளிப்படுத்துகின்றார்கள். அடிகளின் மகா உன்னதமான புகழ்பெற்ற பாரதசக்தி

மகாகாவியத்தைப் படித்துணர்ந்தவர்களுக்கு அடிகளின் விளங்கும் பரமாத்தும பேரறிவைப்பற்றி விளக்கப்படுத்த வேண்டியதில்லை. தொடர்ந்த பணி, தியாகம், தவம், தியானம், யோகம், மவுனம், கவிபுனைதல் ஆகிய இவைதான் மகரிஷி பாரதியாரின் வீரகாவிய வாழ்வின் மகத்துவமான திருமுகமலர்ச்சிகளாகும். இவர்கள் பேரறிவுச் சக்தியின் விளக்கமாய் இந்தியாவில் உள்ள அதிமனிதச்சின்னம், அடிகள் யோகசாதனை தேசிகசாதனையாய் மலர வேண்டுமென்று விழைபவர்.

—தாயுமானார் திருவாக்கு என்னும் ஆங்கில கவிமொழிபெயர்ப்பில் இருந்து தரப்பட்டுள.

தாயுமானாரின் திருநூல் அடிகளின் யோக வாழ்வுக்குப் பாலியத்திலிருந்தே உறுதுணையாய் இருந்தது. அடிகளின் கவிவளத்துக்கும் உரமாய் இருந்திருக்கிறது. தாயுமானார் அவரின் உயிர்நாடி.

அடிகளிடம் மந்திர தீட்சை பெற்ற தமியேன் மனைவியும், அடியேனும் என்றும் அடிகளுக்குக் கடமைப்பட்டுள்ளோம். தமிழ்க்கலைப்பாட்டைத் தாயுமான சுவாமிகளைப் போல் வளர்த்துவரும் அடிகளுக்குத் தமிழுலகம் என்றுங் கடப்பாடுடையது. அடிகள் பல்லாண்டு வாழ்ந்து யோக உணர்வால் அறப்பணி செய்து உலகை உய்விக்க எல்லாம் வல்ல திருவருள் அடிகளுடன் என்றுமிருந்து ஆசிர்வதிப்பதாக!

"பாட்டுக்கோ அன்பினுக்கோ பத்திக்கோ வன்பர்தங்கள்
நீட்டுக்கெல் லாங்குறுகி நின்றாய் பராபரமே"

— தாயுமானார்

தாயுமானார் திருவடி வாழ்க

"பத்தர் சித்தர் வாழி பரிபக்குவர்கள் வாழி செங்கோல்
வைத்தவர்கள் வாழி குருவாழி பராபரமே."

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தாயுமானார் இல்லம்
காரைநகர்

மு. கு. சுப்பிரமணியம்
10-1-66

தாயுமானவர் திருவரலாற்றுச் சுருக்கம்

"நாட்டில் கல்வியறிவு பரந்துள்ளது; கல்வியின் தரம் உயர்ந்துள்ளது" என்று சென்ற பல வருஷங்களாக அரசியல் வாதிகள் பெரும்பாலார் பிரமாணமாகப் பேசியதைக் கேட்டுள்ளோம். இந்தத் தம்பட்ட அடிப்புக்குச் சாவுமணி அடிப்பது போல் அமைந்திருந்தன அண்மையில் இலங்கைச் சர்வகலாசாலையில் நடந்த சம்பவங்கள். எழுத வாசிக்கத் தெரிந்தோர் தொகை கூடியுள்ள தென்பதை ஒத்துக்கொள்கின்றோம். ஆனால் அதற்குப் பொருந்த நல்லறிவு மலர்ச்சி ஏற்பட்டுள்ளதா? கல்வியின் பயனான † ஒழுக்க வாழ்வு பரவியுள்ளதா? என்பவையே தமது முக்கிய கேள்விகள் "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்றஉயர்வற உயர்ந்த இலட்சியத்தை நாம் இப்போது எடுக்கவில்லை.

இற்றைக்கு எழுபது எண்பது ஆண்டுகட்கு முன் நமது சமுதாயத்தில் கேள்வி அறிவே பரவியிருந்தது. அதாவது செவிப்புலன் மூலம் பெற்ற அறிவு. இந்த முறை மிகவும் புராதனமானது; பண்டைக்கால வேத-உபநிடதரிஷிகள், புத்தர், மஹாவீரர் போன்ற மகான்களின் காலத்தில் நடைமுறையில் இருந்த வழக்கம். அதின்படி எழுத்தறியா மக்கள் ஒழுக்க சீலர்களாய் ஞானம் படைத்தவர்களாய் வாழ்ந்தனர். அதே முறையைப் பின்பற்றி இடைக்காலத்தில் கிராமங்களிலுள்ள ஆலயங்களெல்லாம் கலாநிலையங்களாய் விளங்கின. அங்கே நடந்த புராணபடனங்கள், பிரசங்கங்கள்

---

† கற்குநிலை கற்றாற் கருவிய சிறா தருளாய்
நிற்குநிலை கற்பதுவே நீதம பராபரமே-தாயுமானவர்

முதியோருக்கும் இளையோர்க்கும் குழந்தைகட்கும் கூட நல்லறிவை ஊட்டின; அத்தோடு பெரும்பாலான இல்லங்கள் குழந்தைகளின் ஆரம்பக்கல்விக்கு உறைவிடமாயிருந்தன வெனலாம், பாட்டியார் சொல்லிய கதைகள் அவர்கட்கு அறிவையும் தெய்வ பக்தியையும் ஊட்டின.

எமது சொந்த அனுபவம் இங்கு நினைவுக்கு வருகின்றது. சின்னஞ்சிறுவயசு; இரண்டு காலிலும் நாலு காலிலும் மாறிமாறி நடமாடிய காலம், எங்கள் இல்லத்தில் மாலை ஆறரை மணியளவில் தந்தையாருடன் ஆன்மிக உறவு பூண்டிருந்த ஒருவர் வந்து தோத்திரப்பாடல்கள் ஓதுவதுண்டு. அவர் ஒரு தேவி உபாசகர். தாயுமானவரிடம் அளவற்ற பிரேமை கொண்டவர், எனவே அந்தப் பக்தர் எப்போதும் தாயுமானவர் பாடல்களையே பாடுவார். முதலில் ''பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி'' எனச்சிறப்பிக்கும் பெரிய விருத்தம் வரும். தந்தையின் மடியிலிருந்து கேட்டு அதனை மனனம் பண்ணிக் கொண்டேன், எனக்கு அட்சாரம்பம் நடப்பதற்கு இரண்டு ஆண்டுகட்கு முன்னரேயே, அப்பெரியார் என்னைப் போன்ற குழந்தைகட்காக ''ஆனந்தக்களிப்பு'' ''பராபரக் கண்ணி'' ''எந்நாட் கண்ணி'' முதலாய எளிய இனிய சிறிய பாடல்களையும் பாடுவார். அவற்றையும் ஒழுங்காக மனனம்பண்ணிக் கொள்வேன். இந்த நன்முறையில் வீட்டில் ஆரம்பித்த சமய அறிவு அடுத்தபடியாக ஆலயங்களின் தாயாரின் மடியிலிருந்து கேட்ட புராணபடனத்தால் விரிவடைந்ததெனலாம்.

தமிழ்ப்பள்ளிக்கூடத்தில் பதின்மூன்று வயசுக்குள் எட்டாம் வகுப்பைத் தாண்டி ஆங்கிலக் கல்லூரி

சென்று அங்கே மூன்றரை ஆண்டு எல்லைக்குள் அக்காலத்தில் உயர்ந்த தராதலமாகக் கருதப்பட்ட கேம்பிறிச் சீனியர் வகுப்பையும் எட்டிப்பார்த்து விட்டு, அரசாங்க உத்தியோகத்தில் புகுந்து ஆண்டுகள் கழிந்து விட்டன. இல்லறத்தில் புகுமுன்னரேயே ஆன்மீகப்பசி ஆரம்பித்து விட்டது, புகையிரத மார்க்கம இந்தியா முழுவதும் இலவசமாக யாத்திரை செய்யக்கூடிய வசதி வாய்த்திருந்தபடியால் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகத் தொடங்கும் பாக்கியம் கிடைத்தது. அந்த யாத்திரையானது குலதெய்வமாகிய முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஆரம்பித்து. பாடல்பெற்ற தென்னாட்டுச் சிவத்தலங்களைத் தழுவிப், பின்னர் தென்னாட்டு வடநாட்டு விஷ்ணு க்ஷேத்திரங்களையுங் கூட்டி கன்னியாகுமரியிலிருந்து இமயம் வரையிலும், பூரி-ஜகந்நாத்திலிருந்து துவாரகை வரையிலும் பரந்து விரிந்து விட்டது, இத்தனையும் எனது ஆத்மீகப்பசிக்கு ஆர்வம் என்னும் நெய் வார்த்து, அதனைக் கொழுந்துவிட்டெரியத் தூண்டிவிட்டதெனலாம், இந்த மனோநிலையில் ''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'' என்னும் தாயுமானவர் மணி வாக்கு நினைவுக்கு வரவே, மெய்யடியார் உறவையும் அவர்கள் வாழ்ந்த அறநிலையங்களையும் தேடிச்செல்லும் வாஞ்சை பிறந்தது. இந்தத் தேடுதலின்பயனாக, திருவண்ணாமலையில் தட்சணாமூர்த்தி திருவடிவிலமர்ந்து உலகுக்கு உய்யு நெறியருளிய பகவான் ரமண மஹரிஷிகளின் திருப்பாதங்களில் சரணடையும் அரும் பாக்கியங்கிடைத்தது. நாடெங்கும் சுற்றி வந்த எம் வாழ்க்கைப் படகு அங்கே உபசாந்தத் துறையை யடைந்ததெனலாம்.

அன்பர்கள் சிலருடன் கூடி அந்தப்புனித சந்நிதானத்தில் மௌன தியானஞ் செய்து விட்டு ஒரு

நாள் வெளிவந்த போது, அவர்களுள் ஒருவர் மஹரிஷிகளின் ''நான் யார்''? என்னும் மந்திரம்பற்றி வியாக்கியானஞ் செய்தார். இதற்கு விரிவான விளக்கத்தை தாயுமானவர் பாடல்களில் முக்கியமாக ''ஆனந்தக்களிப்பில்'' காணலாமென்று கூறிமுடித்தார். இந்த வியாக்கியானமானது எனக்கு ''பாராதி பூதநீயல்லை-உன்னிப் பாரிந்திரியங்கரணநீயல்லை. ஆராயுணர்வு நீயென்றான் - ஐயன் அன்பாயுரைத்த சொல்லானந்தந் தோழி'' என்னும வரிகளை நினைவுக்குக் கொணர்ந்தது. சிறிது வேளை கழித்து, அங்குள்ள புத்தகசாலைக்குச் சென்று விற்பனைக்கிருந்த சில புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தேன். அங்கிருந்த விற்பனையாளர் ''இந்த புத்தகம் அண்மையில் தான் அச்சேறிவந்தது. சுவாமி சுத்தானந்தபாரதியார் அழகான எளிய தமிழில் வரைந்துள்ளார்'' என்று கூறி ''பெரியார் வரலாறு'' என்ற அறுநூறு பக்கங் கொண்ட நூலை எடுத்து நீட்டினார். அதன் விலை ரூபாய் இரண்டையும் கொடுத்து விட்டு வெளிவந்ததும், எனது கவனம் முதலில் ''தென் சுடர்கள்'' என்னும் அருள் அத்தியாயத்திற்குச் சென்றது. அதிலும் 'தாயுமானவர்' என்ற தலைப்பில் இருந்த வியாசத்தையே பிரித்துப் பார்த்தேன். 465ம் பக்கத்தின் அடியில்,

''ஒவ்வொரு தமிழனும் தாயுமானவரைக் கற்க வேண்டும். அது தமிழ் உபநிடதம். நாடோறும் தூய சிந்தையுடன் பத்துப்பாடல்களை ஓதிச்சிந்தித்து வந்தால் உள்ளந்தெளியும், வாழ்வும் ஒளிபெறும். தாயுமானவர் அறிவொளிக் காந்தம் அதன் அருளருவி, சிறுநெறியினின்று மனத்தை உந்தியிழுத்து அருணெறியில் திருப்பும் ஆசான்'' என்ற வசனத்தைப் படித்தேன். உள்ளம் பூரித்தது. இதனை வரைந்த அடிகளார் பிறப்பதற்கு முன்னரே, ஏன்? அவருக்கு இரண்டு வயதால் மூத்தவனான யான் பிறவியெடுக்கு முன்னரேயே, எனது

தந்தையாரும் அவரது அத்யாத்ம சகோதரரும், இந்த அரும்பெரும உண்மையை எவர் மூலம், எங்கே, எப்படித்தான் அறிந்தனரோ வென வியந்தேன். அவர்கள் காலத்திலிருந்த கல்வி முறையைப் பாராட்டிப் புகழ்ந்தேன். கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகிய மூன்றும் அந்த முறையில் எவ்வளவு நெளிவாக வாழ்வுடன் பிணைக்கப்பட்டிருந்த தென்பதை உணர்ந்தேன். அதில் சிறிதளவாவது என் வாழ்விலும் கிடைத்த புண்ணியத்தைப் பாராட்டிக் கண்ணீர் விட்டேன்.

இந்தியாவின் சரித்திரத்தில் மக்கள் வாழ்வின் சகல துறைகளிலும் கொடிய இருள்படர்ந்திருந்த காலம் கி. பி. பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளாகும். மொகலாயரின் அரசாட்சி வடநாட்டில் மிக உன்னத நிலையடைந்திருந்த காலத்திலும் கூட, தனது செல்வாக்கை இழக்காமல், அடிமைப்படாமல் இருந்து தென்னிந்தியா, தன் சீரையும் சிறப்பையும் முற்றாய் இழந்த காலம் இதுவாகும். நலிவுற்றிருந்த நாயக்கர் ஆட்சியை வீழ்த்த நவாப்பின் படைகளும் மராட்டியர் சேனையும் போட்டியிட்டன. இன்னொரு பக்கத்தில் பிரித்தானிய பிரான்சிய வியாபாரிகளின் சூழ்ச்சிகள், கொடுமைப் போர்கள் நாட்டைப் பாழாக்கின. சமய வாழ்வு மிகவும் தாழ்ந்த நிலைக்கு வந்திருந்தது. நடராசப் பெருமானே ஆடுஞ் சிதம்பரத்தை விட்டகன்று புளியமரப் பொந்தில் மறைந்திருக்க வேண்டிய கதிக்கு வந்ததென்றால் மேற்சொல்வானேன்?

இவ்வித மிகவும் நெருக்கடியான காலத்தில் தோன்றியவரே தாயுபானவர். அவர் பிறந்த ஆண்டும் மாசமும நிச்சயமாக ஒருவருக்குந் தெரியாது. 1704-ம் ஆண்டு தொடக்கம் 1731ம் ஆண்டு வரையில் திருச்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த விஜயரங்க சொக்கலிங்க நாயக்கரின் காலத்தில் பிறந்தார் என்பது மாத்திரம் நிச்சயம். அந்த மன்னனின் அரண்

மனையில் உத்தியோகம் பார்த்தவரே தாயுமானவரின் தந்தையாரான கேடிலியப்பபிள்ளை. இப்பெரியார் வேதாரணியத்தைச் சேர்ந்தவர். அவர் கஜவல்லியம்மையாருடன் பூர்விகமனையில் நடாத்திய இல்லறத்தில் சிவசிதம்பரம் என்னும் மைந்தன் பிறந்தான். அந்தக் குழந்தையை, தனது தமையனாருக்கிருந்த பிள்ளையில்லாக் குறை தீர்க்க கொடுத்துவிட்டு, மனைவியுடன் திருச்சி வாழ்வை ஏற்றிருந்தனர். அங்கு கோயில்கொண்டிருக்கும் தாயுமானக் கடவுளை இருவரும் உருகி வழிபட்டுப் பெற்ற இரண்டாவது மைந்தனே தாயுமானவராவர். அத்தெய்வத்தின் திருவருளால் பிறந்த குழந்தைக்கு அவரின் திருநாமத்தையே சூட்டினர், கருவிலே திருவடைந்த இந்த ஞானச்சுடருக்கு அந்தப் பெயர் எவ்வளவு பொருத்தமாய் அமைந்த தென்பதை இன்று உலகு நன்கறியும். †

அறிவாளியான, அரிய பக்தனான தந்தையின் பராமரிப்பின் கீழ், தாயுமானவச் செல்வன் பதினாறாண்டுப்பராயம் அடையுமுன் தமிழ், ஆரியம் இரண்டிலுமுள்ள சமயசாஸ்திரங்கள், தோத்திரங்கள், புராண இதிகாசங்கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தான். இச்சமயம் தந்தை சிவபதம் அடைந்தனர். மைந்தனின் அறிவு ஆற்றலையும் ஒழுக்கத்தையும் நன்கு கவனித்து வந்த சொக்கலிங்க நாயக்கர் தந்தையின் பதவியில் அமருமாறு வேண்டினன். அவரது உள்ளம் அரச உத்தியோகத்தையோ உழைப்பையோ விரும்பவில்லை. ஞானவிசாரத்தில் ஈடுபடவே அவாவியது, எனினும், நன்றி உணர்ச்சி தூண்ட அரண்மனைப் பதவியை ஏற்று, திருவாதவூர் அடிகள் நடந்து கொண்டது

† "மகன் தந்தைக் காற்றுமுதவி யிவன்தந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

— பொய்யாமொழி

போல்" கூத்தினர் தன்மை வேறு கோலம் வேறாகுமாபோல், நித்தனர் மனத்தின் முன்போல் நிகழ்த்தினர் வழுதி நீதி" என்ற முறையில் உத்தியோகம் பார்த்தனர்

தந்தை காட்டிய வழியைப் பின்பற்றி தாயுமானக்கடவுளைத் தினந்தோறும் தரிசித்து வாழ்ந்தார். ஒருநாள் அங்கே அவர் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் வழிபாடு செய்யும் வேளையில், திருமூலர் மரபில் வந்த சிவராஜயோகி ஒருவரின் அருட்பார்வை அவர் மீது பாய்ந்தது. அப்பெரியாரைத் தொடர்ந்து சென்று ஓர் தனியிடத்தில் அவரது திருப்பாதங்களைத் தீண்டி வழிபட்டார். அன்பனின் பக்குவத்தையறிந்த அந்த மோனகுரு, தமது கையிலிருந்த சிவஞான சித்தியாரை அவருக்குக் காட்டி, அந்நூல் விளக்கும் சிவாத்துவித நெறியைத் தெளிவாக எடுத்துக்கூறி உபதேசம் அருளி; "அன்ப சிறிது காலம் நீ இல்லறத்திலிருந்து ஒரு புதல்வனைப் பெற்றபின் நாம் வந்து உனக்கு நிட்டை கூட்டுவோம். நாம் வருவதுறுதி. 'சும்மா இரு' என்று கூறிமறைந்தார். அன்றுபிடித்த ஞானத்தீ மோனகுருவைச் சதா நினைந்துருகி, சும்மா இருக்கும் சூட்சுமத்தைக் கருதி ஆழ்ந்த சாதனையில் ஈடுபட்டு வரலானார். நாளடைவில் நாயக்க மன்னனும் இப்பெரியாரின் பரிபக்குவத்தை நன்கறிந்தனன். தன் கீழ் அவரை உத்தியோகத்தில் வைத்திருப்பது முறையல்லவென உணர்ந்தனன். அந்த மன்னன் அரசியல் நிர்வாகத்தில் ஆற்றல் குறைந்தவனாயிருந்த போதிலும் ஆன்மீக வாழ்விலும் அடியார் பக்தியிலும் ஆர்வமுடையவன். 1710ம் ஆண்டில் (சகவருஷம் 1632, விக்ருதி கார்த்திகை சுக்லபக்ஷ 15 திங்கள்கிழமை ரோகிணி நக்ஷத்திரம் கூடிய வேளையில் இந்த மன்னன் காஞ்சிகாம கோடிபீடத்தின் 61வது தலைவராயிருந்த மூன்றாவது மகாதேவர் சுவாமிகளுக்கு அளித்த பூதான சாசனம் இப்போ கண்டெடுக்கப்பட்டுள்ளது.

eternity. Everything becomes manifestation of Brahman. For instance, as I look round the room I see everything as the Brahman. It is not thinking, it is a concrete experience, even the wall, the book is Brahman. I see you not as X but as a divine being in the Divine It is a wonderful experience''

Sri Aurobindo. 1-1-39.

Life Of Sri Aurobindo: page, 192.

வினா: மனித சிற்றுணர்வு (அறிவு) பேருணர்வால் (சிவ போதத்தால்) திரும்ப ஸ்தாபிதம் பெற்றால் என்ன நிகழ்கிறது?

விடை: பேருணர்வு பெற்றவருக்கு: நித்திய சாந்தம், நித்திய ஆத்மீக பலம், எல்லை அற்ற சிற்றம்பல உணர்வு, தெய்வீக சீவியம் உண்டு. சர்வமும் பிரமாவின் விளக்கமாய்த் தோன்றும். (எப்பொருளும் நீயெனவே எண்ணி நான் தோன்றாதநிலை) இது. அநுபூதி உணர்வு. இவ்வறையை நான் சுற்றிப் பார்க்கும் போது இச்சுவர், இப்புத்தகமெல்லாம் சிவமயமாய்த் தோற்றுகிறது. வேலனாகிய உன்னை வேலனாய் அல்லப்பார்க்கிறேன். தெய்வத்துள் நான் நீ அற்ற தெய்வமனிதனாய்க் காண்கிறேன். இது ஒரு அற்புதமான அநுபூதி.

''குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலுஞ்
செறிவற் றுலகோடுரை சிந்தையுமற்
அறிவற் அறியாமையு மற்றதுவே.''

—கந்தர் அநுபூதி

அறுவகைப் பஞ்சாட்சரம்

ஸ்தூல பஞ்சாட்சரம்:- ''நமசிவாய.''
சூக்கும பஞ்சாட்சரம்:- ''சிவாயநம''
காரண பஞ்சாட்சரம்; ''சிவாயசிவ.''
மகாகாரண பஞ்சாட்சரம் ''சிவாய.''
மகாமனு அல்லது முத்திபஞ்சாட்சரம்: ''சி.''

சிவாயநம-சிவபெருமானுக்கு வணக்கம்
தேகதிருஸ்டிப்படி சீவன் சிவத்தின் அடிமை.

நம-சீவாத்துமா, சிவ-பரமாத்துமா. அய- ஐக்கியம். சீவாத்துமாவும் பரமாத்துமாவும் ஒன்று.

ஆகையால் ''ஓம் ந சிவாய நம'' ''தத்துவமசி''-அத்-துவம்-அசி. ''அதுநான்'' என்ற வேதாந்திகளின் மகா வாக்கியத்தைப் போன்ற ஒரு பெரிய வாக்கியம்.

தான் உடல் என்பது பெரும் அஞ்ஞானம்; இப் பெரும் பாவமான விளக்கத்திலிருந்துதான், நான் எனது என்னுஞ் சிந்தனையும், இதனோடு சம்பந்தப்பட்ட எல்லாப் பாவங்களும் எழுகின்றன, நீ அல்லும் பகலும் அநுதினமும் ''நான் தெய்வ'' மென்ற ஞான பஞ்சாட்சரத்தை நெஞ்சில் ''செப்புவ தெல்லாஞ் செபநான் சிந்திப்பதெல்லா நின் ஒப்பில் தியானமென வோர்ந்தேன் பராபரமே.,'' என்று வழுத்திவா: நீ தெய்வப் பிறப்பைச் சட்டை ஒத்த இவ்வுடலைதள்ளுமுன்னே ''எடுத்துச் சகசநிட்டையைப் பெற்று நிர்விகற்பக் காட்சியைத் தாயுமானசுவாமிகளைப் போல் எடுப்பாய். எதை நீ நினைக்கிறாயோ நீ அதுவாவாய் † ''சிவ சிவ என்கிலர் தீவினையாளர், சிவ சிவ என்றிடத் தீவினை மாளும், சிவ சிவ என்றிடத் தேவருமாவர், சிவ சிவ என்றிடச் சிவகதி தானே'' என்றார் ''சக்கரவர்த்தி தவராசயோகியெனு மிக்க திருமூலரும்.''

† ''வேதமுதல் ஆகம'' மென்ற பாடலைப் பார்க்கவும்.

இய துண்டெனினும், அவர்கள் வாக்குகள் அவர்களது காலத்தின் போக்குக்கும் சூழ்நிலைக்கும் பொருந்தும் அளவில் மாத்திரம் நின்றுவிட்டன; தாராளமாய் விரிவடையவில்லை. தாயுமானவர் வாக்குகளோ தீர்க்கதரிசனம் பொருந்தியவையாய் சூழ்நிலையைத் தாண்டியதுடன் காலத்தையும் இடத்தையும் வென்றுள்ளன. அவர் வரலாறும் உபதேசமணிகளும் ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய அந்நிய நாடுகளிலும் பரவச் செய்யும் பணியில் என்னையும் ஓர் கருவியாக அவர் ஏற்றுக்கொண்டவிதம் அற்புதமானதாகும். இந்தப் பணியில் எனக்கு ஊக்கமும் ஆதரவும் அளித்த அன்பர் திரு. மு. கு. சுப்பிரமணியம் அவர்கள். அவரே அடுத்த தாயுமானவர் ஜயந்திவிழாவில் அன்பளிப்பாக வழங்குவதற்காக இந்த நூலை வெளியிடுகிறார், காரை நகரில் அவர் வசிக்கும் வீடே'' தாயுமானவர் இல்லம்'' என்று பிரசித்தியடைந்துள்ளது;

தாயுமானவர் மஹாசமாதியடைந்து நூற்று ஐம்பத்தொரு ஆண்டுகள் கழிந்தபின், அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகரில் சர்வமதமகாநாடு கூடிநின்று அங்கே வேதாந்தக் கொடியுயர்த்தி உலகப்புகழைப் பெற்ற சுவாமி விவேகானந்தரின் பிரசங்கத்தில் தாயுமானவரின் தீர்க்கதரிசனம் வெளியாயிற்று. அத்தோடு அவரது மேற்குறிப்பிட்ட பாட்லின் எதிரொலியையும் கேட்கின்றோம். சுவாமிஜியின் மணிவாசகங்கள் பின்வருமாறு:-

''பிறமத வெறுப்பின்றி சர்வமதசமரசத்தை உலகிற்கெல்லாம் போதித்த சமயம் எங்களது சமயம் என்று பெருமையுடன் கூறுகின்றேன். அகில சமரசம் மட்டுமல்ல, எல்லா மதங்களும் உண்மை யென்பதை நாங்கள் நம்புகிறோம்.''

''பலவேறு முகங்களில் உற்பத்தியாகும் வெவ்வேறு நதிகள் முடிவில் ஒரே கடலில் கலக்கின்றன;

அதுபோல அவரவர்க்கு உகந்தவாறு கொள்ளும் பல சமயநெறிகள் வளைந்தும் நேராக நீண்டும் வெவ்வேறாகத் தோன்றினும், இறைவனே! எல்லாம் நின்னையே அடைகின்றன.

''சாதிகுலம் பிறப்பிறப்பும் பந்தமுத்தி
அருவுருவத் தன்மை நாமம்
ஏதுமின்றி யெப்பொருட்கும் எவ்விடத்தும்
பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாத்ரூவெளியை மனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில்பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்;

நன்னறிவுச் சுடரான தாயுமானவர் வாழ்க! அவர் அருளிய உபநிடதத்தை ஓதி அவர் அடியார்கள் உபசாந்த நிலைபெறுக!!

க. இராமச்சந்திரன்
ஜயந்திபுரம், தலங்காமம்
கொழும்பு
16-1-1966

தாயுமானர் உலகவேதம்

மனிதராய்ப் பிறந்தோர் அனைவரும் உலகில்
வாழ்வாங்கு வாழ்ந்து நீடூழி
புனிதராகிடவே பூரண ஞானக்
பூத்துதல் லின்பமெய்க் கனிகள்
இனிது வந்திடவே தாயுமானாரை
இடையறா தோதிடு வீரே
தனிமவுனத்தின் சாந்தமீந் துலக
வேதமாய்த் தழைத்தது தானே!

அணிவளர் சிற்றம் 'பலந்தருகின்ற
ஆனந்தக் கனியமுதிதுவோ'
மணிவளர் வேதமந்திரப் புலவர்
வாய்மொழி தமிழில் வந்ததுவோ
தணிவறு தெய்வக் காதலே தழைத்த
தாயுமானவர் திருவாக்கைப்
பணிவுடன் ஓதிப் பயனறிந்தவரே
பரசுகம் பார்த்தவராமே!

கவியோகி சுத்தானந்த பாரதியார்
4—1—66

உ
சிவமயம்

தாயுமானர் திருவாக்கு

குரு வணக்கம்

வாயு மாணவ மலமும் மறுபிறப்புந்
துறவறத்தான் மாற விசி
யாயும்வே தாகமத்தி னருள்வழியிற்
சிவஞான வாழி மூழ்கிப்
பாயுமால் விடைப்பரம னிருவியலும்†
பார்த்துணர்ந்து பதத்தி னென்றுந்
தாயுமா னவன்றனிரு சரணமலர்
சிரமதனிற் றரித்து வாழ்வாம்

புராதனமெய்ச் சிவஞான போதமெனுஞ்
சித்தாந்தப் பொருள்கள் யாவுந்
தராசுமுனை யாநிறுவிச் சாயாம
லனுபவத்திற் றமிழைப் பாடிப்
பராவுசிவ மயமாகிப் பரஞானத்
தனிமைநெறிப் பரிமேலேறி
நிராமயதே யத்தேகி நிறைதாயு
மானவனை நினைந்து வெல்வாம்:

† பொதுவியல்பு, சிறப்பியல்பு.

PUBLIC LIBRARY

முதியோருக்கும் இளையோர்க்கும் குழந்தைகட்கும் கூட நல்லறிவை ஊட்டின; அத்தோடு பெரும்பாலான இல்லங்கள் குழந்தைகளின் ஆரம்பக்கல்விக்கு உறைவிடமாயிருந்தன வெனலாம், பாட்டியார் சொல்லிய கதைகள் அவர்கட்கு அறிவையும் தெய்வ பக்தியையும் ஊட்டின.

எமது சொந்த அனுபவம் இங்கு நினைவுக்கு வருகின்றது. சின்னஞ்சிறுவயசு; இரண்டு காலிலும் நாலு காலிலும் மாறிமாறி நடமாடிய காலம், எங்கள் இல்லத்தில் மாலை ஆறரை மணியளவில் தந்தையாருடன் ஆன்மிக உறவு பூண்டிருந்த ஒருவர் வந்து தோத்திரப்பாடல்கள் ஓதுவதுண்டு. அவர் ஒரு தேவி உபாசகர். தாயுமானவரிடம் அளவற்ற பிரேமை கொண்டவர், எனவே அந்தப் பக்தர் எப்போதும் தாயுமானவர் பாடல்களையே பாடுவார். முதலில் ''பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி'' எனச்சிறப்பிக்கும் பெரிய விருத்தம் வரும். தந்தையின் மடியிலிருந்து கேட்டு அதனை மனனம் பண்ணிக் கொண்டேன், எனக்கு அட்சாரம்பம் நடப்பதற்கு இரண்டு ஆண்டுகட்கு முன்னரேயே, அப்பெரியார் என்னைப் போன்ற குழந்தைகட்காக ''ஆனந்தக்களிப்பு'' ''பராபரக் கண்ணி'' ''எந்நாட் கண்ணி'' முதலாய எளிய இனிய சிறிய பாடல்களையும் பாடுவார். அவற்றையும் ஒழுங்காக மனனம்பண்ணிக் கொள்வேன். இந்த நன்முறையில் வீட்டில் ஆரம்பித்த சமய அறிவு அடுத்தபடியாக ஆலயங்களில் தாயாரின் மடியிலிருந்து கேட்ட புராணபடனத்தால் விரிவடைந்ததெனலாம்.

தமிழ்ப்பள்ளிக்கூடத்தில் பதின்மூன்று வயசுக்குள், எட்டாம் வகுப்பைத் தாண்டி ஆங்கிலக் கல்லூரி

சென்று அங்கே மூன்றரை ஆண்டு எல்லைக்குள் அக்காலத்தில் உயர்ந்த தராதலமாகக் கருதப்பட்ட கேம்பிரிச் சீனியர் வகுப்பையும் எட்டிப்பார்த்து விட்டு, அரசாங்க உத்தியோகத்தில் புகுந்து ஆண்டுகள் கழிந்து விட்டன. இல்லறத்தில் புகுமுன்னரேயே ஆன்மீகப்பசி ஆரம்பித்து விட்டது, புகையிரத மார்க்கம இந்தியா முழுவதும் இலவசமாக யாத்திரை செய்யக்கூடிய வசதி வாய்த்திருந்தபடியால் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகத் தொடங்கும் பாக்கியம் கிடைத்தது. அந்த யாத்திரையானது குலதெய்வமாகிய முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஆரம்பித்து. பாடல்பெற்ற தென்னாட்டுச் சிவத்தலங்களைத் தழுவிப், பின்னர் தென்னாட்டு வடநாட்டு விஷ்ணு க்ஷேத்திரங்களையுங் கூட்டி கன்னியாகுமரியிலிருந்து இமயம் வரையிலும், பூரி-ஜகந்நாத்திலிருந்து துவாரகை வரையிலும் பரந்து விரிந்து விட்டது, இத்தனையும் எனது ஆத்மீகப்பசிக்கு ஆர்வம் என்னும் நெய் வார்த்து, அதனைக் கொழுந்துவிட்டெரியத் தூண்டிவிட்ட தெனலாம், இந்த மனோநிலையில் ''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு வார்த்தை சொலச்' சற்குருவும் 'வாய்க்கும் பராபரமே'' என்னும் தாயுமானவர் மணி வாக்கு நினைவுக்கு வரவே, மெய்யடியார் உறவையும் அவர்கள் வாழ்ந்த அறநிலையங்களையும் தேடிச்செல்லும் வாஞ்சை பிறந்தது. இந்தத் தேடுதலின்பயனாக, திருவண்ணாமலையில் தட்சணாமூர்த்தி திருவடிவிலமர்ந்து உலகுக்கு உய்யு நெறியருளிய பகவான் ரமண மஹரிஷிகளின் திருப்பாதங்களில் சரணடையும் அரும் பாக்கியங்கிடைத்தது. நாடெங்கும் சுற்றி வந்த எம் வாழ்க்கைப் படகு அங்கே உபசாந்தத் துறையை யடைந்ததெனலாம்.

அன்பர்கள் சிலருடன் கூடி அந்தப்புனித சந்நிதானத்தில் மௌன தியானஞ் செய்து விட்டு ஒரு

5. ஆக்கையெனு மிடிகரையை மெய்யென்ற பாவிநா
னத்துவித வாஞ்சை யர்தல்
அரியகொம் பிற்றேனை முடவனிச் சித்தபடி
யாகுமறி வினிழ வின்பந்
தாக்கும்வகை யேதிநாட் சரியைகிரி யாயோக
சாதனம் விடுத்த தெல்லாஞ்
சன்மார்க்க மல்லவிவை நிற்கவென் மார்க்கங்கள்
சாராத பேர றிவதாய்
வாக்குமன மணுகாத பூரணப் பொருள்வந்து
வாய்க்கும் படிக்கு பாயம்
வருவித்து வட்டாத பேரின்ப மானசுக
வாரியினை வாய்ம டுத்துத்
தேக்கித் திளைக்கநீ முன்னிற்ப தென்றுகாண்
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

6. ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனு
ளசரசர பேத மான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை
யாதிநூ லையும் வருத்துச்
சைவமுத லாமளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்தநீ யுன்னைநா னணுகவுந்
தண்ணருள் வகுக்க விலையோ
பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்ய ரறிவிற்
போதபரி பூரண வகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்ற பொருளே
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

மௌனகுரு வணக்கம்

7. ஆசைநிக ளத்தினை நிர்த்தூளி படவுதறி
யாங்கார முளையை யெற்றி
யத்துவித மதமாகி மதமாறு மாறுக
வங்கையின் விலாழி யாக்கிப்
பாசவிரு டன்னிழ லெனக்களித் தார்த்துமேற்
பார்த்துப் பரந்த மனதைப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க வுண்டுமுக
படாமன்ன மாயை நூறித்
தேசுபெற நீவைத்த சின்முத்தி ராங்குசச்
செங்கைக் குளேய டங்கிச்
சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்துநின்
திருவருட் பூர்த்தி யான
வாசமுறு சற்சார மீதென்னை யொருஞான
மத்தகச மௌனவ ளர்த்தாய்
மந்த்ர குருவேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

பொழிப்புரை:- ஆசையென்கிற விலங்கினை தூளியாமாறு விசியெறிந்து, மமதாங்காரமெனும் முளையினை வேர்களைந்தெறிந்து, அத்வைதமான மதத்தினைக் கொண்டு அறுவகை மதங்களும் (உலோகாயுத, புத்தம், சமணம், மீமாம்சம், பாஞ்சராத்திரம், பட்டாசாரியம்) நதிகளாகத் துதிக்கையினுமிழ் நீராகச்செய்து, பாசமாமிருளைத் (ஆணவம், கர்மம், மாயை) தனது நிழலாகக் கருதிக் கோபங்கொண்டு கொர்ச்சித்து, மேநோக்கிள மனதினைப் பெரியதோர் பெருங்கவள உருண்டையாக நிரம்பவும் உண்டு. நெற்றிப்பட்டம் போன்றுள்ள மாயை நசுக்கி, பிரகாசிக்குமாறு நீ அமைத்துள்ள ஞானமுத்திரையாம் அங்குசத்தினைத் தரித்துள்ள செங்கையினிடமாக அடங்குதல் ஆக்கி ஞானமாய பேரானந்த வெள்ளத்தாழ்த்தி, நினது திருவருள் நிறைவி

ளில் வாசமாயிருக்கும் விசாலித்த கூட்டத்திலே அடிமையை ஓர் ஞானாம்ச மத்த யானை போன்று வளர்த்தனை; ஏ மந்திரகுருவே! தாந்திரிக (கடவுளைத்தாயாய் உபாசித்தல்) யோகாசாரியனே! திருமூலநாயனாரது மரபில் தோன்றி வந்துள்ள மோன சற்குருநாதனே!

8: மின்னனைய பொய்யுடலை நிலையென்று மையிலரு
 விழிகொண்டு மையல் பூட்டும்
மின்னார்க ளின்பமே மெய்யென்றும் வளர்மாட
 மேல்வீடு சொர்க்க மென்றும்
பொன்னையழி யாதுவளர் பொருளென்று போற்றியிப்
 பொய்வேட மிகுதி காட்டிப்
பொறையறிவு துறவித லாதிநற் குணமெலாம்
 போக்கிலே போக விட்டுத்
தன்னிகரி லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத்
 தரணிமிசை லோகா யதன்
சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த
 சமரச சிவானு பூதி
மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டன்பின்
 வாழ்வித்த ஞான குருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
 மரபில்வரு மௌன குருவே.

9: கல்லாத வறிவுமேற் கேளாத கேள்வியுங்
 கருணைசிறி தேது மில்லாக்
காட்சியுங் கொலைகளவு கட்காம மாட்சியாய்க்
 காதலித் திடுநெஞ் சமும்
பொல்லாத பொய்ம்மொழியு மல்லாது நன்மைகள்
 பொருந்துகுண மேது மறியேன்
புருஷர்வடி வானதே யல்லாது கனவிலும்
 புருஷார்த்த மேது மில்லேன்

எல்லா மறிந்தநீ யறியாத தன்றெனக்
 கெவ்வண்ண முய்வண் ணமோ
இருளையிரு ளென்றவர்க் கொளிதார கம்பெறு
 மெனக்குநின் னருடா ரகம்
வல்லான் எனும்பெயர் உனக்குள்ள தேயிந்த
 வஞ்சகனை யாள நினையாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
 மரபில்வரு மௌன குருவே.

கருணாகரக் கடவுள்

10. பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே
 பாவித் திறைஞ்ச வாங்கே
பார்க்கின்ற மலருடு நீயே யிருத்தியப்
 பனிமல ரெடுக்க மனமும்
நண்ணே னலாமலிரு கைதான் குவிக்கவெனின்
 நானு மென்னுள நிற்றிநீ
நான்கும் பிடும்போ தரைக்கும் பிடாதலால்
 நான்பூசை செய்தல் முறையோ
விண்ணேவி ணாதியாம் பூதமே நாதமே
 வேதமே வேதாந் தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
 வித்தேய வித்தின் முளையே
கண்ணே கருத்தேயெ னெண்ணே யெழுத்தே
 கதிக்கான மோன வடிவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
 கருணா கரக்க டவுளே.

11. உடல்குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்க
 ளூற்றென வெதும்பி யூற்ற
வூசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
 யோருறவு முன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துள் ணடுக்குறப்
 பாடியா டிக்கு தித்துப்

பனிமதி முகத்திலே நிலவலைய புன்னகை
பரப்பியார்த் தார்த் தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித்துக் கூப்பி
வானேய வானி லின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தி யேத்துங்
கடன்மடை திறந்தனைய வன்பரன் புக்கெளிமை
கன்னெஞ் சனுக்கெ ளியையோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்க டவுளே.

சித்தர்கணம்

12. பாட்டளி துதைந்துவளர் கற்பகந ளிழலைப்
பாரினிடை வரவ ழைப்பீர்
பத்மநிதி சங்கநிதி யிருபாரி சத்திலும்
பணிசெயுந் தொழிலா ளர்போற்
கேட்டது கொடுத்துவர நிற்கவைப் பீர்பிச்சை
கேட்டுப் பிழைப்போ ரையுங்
கிரீடபதி யாக்குவீர் கற்பாந்த வெள்ளமொரு
கேணியிடை குறுக வைப்பீர்
ஓட்டினை யெடுத்தா யிரத்தெட்டு மாற்றுக
வொளி விடும் பொன்னாக்கு வீர்
உரகனு மிளைப்பாற யோகதண் டத்திலே
யுலகுசுமை யாக வருவான்
மீட்டிடவும் வல்லநீ ரென்மனக் கல்லையனன்
மெழுகாக்கி வைப்ப தரிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

13. எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதா
னியாதினு மரிதரிது காண்
இப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ
வேதுவருமோ வறிகி லேன்

கண்ணக நிலத்துநா னுள்ளபொழு தேயருட்
ககனவட் டத்தி னின்று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்துமதி யவச முறவே
பண்ணுவது நன்மையிந் நிலைபதியு மட்டுமே
பதியா யிருந்த தேகப்
பவுரிகுலை யாமலே கௌரிகுண் டலியாயி
பண்ணவித னருளி னாலே
விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே
வேண்டு வேனுமதடிமைநான்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

ஆனந்தமான பரம்

14. கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்குமக்
குணமொன்று மொன்றி லேன்பாற்
கோரமெத் தனைபக்ஷ பாதமெத் தனைவன்
குணங்க ளெத்தனை கொடியபாழ்ங்
கல்லாமை யெத்தனை யகந்தையெத் தனைமனக்
கள்ள மெத்தனை யுள்ளசற்
காரியஞ் சொல்லிடினு மறியாமை யெத்தனை
கதிக்கென் றமைத்த வருளிற்
செல்லாமை யெந்தனைவிர் தாகோஷ்டி யென்னினோ
செல்வதெத் தனைமு யற்சி
சிந்தையெத் தனைசலன மிந்த்ரஜாலம்போன்ற
தேகத்தில் வாஞ்சை முதலாய்
அல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை
யானே னிவைக்கு மாளோ
வண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே.

15. காராரு மாணவக் காட்டைக் களைந்தறக்
கண்டகங் கார மென்னுங்
கல்லைப் பிளந்துநெஞ் சகமான பூமிவெளி
காணத் திருத்தி மேன்மேற்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீரா கவே
பாய்ச்சியது பயிராகு மட்டுமா மாயையவன்
பறவையணு காத வண்ண
நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்ட மெய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
நின்னருட் பார மென்றும்
ஆராரு மறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரிய மயமே
யண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே.

16. எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினுமென்
னிதயமு மொடுங்க வில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவிலை
யாதி னும்மபி மானமென்
சித்தமிசை குடிகொண்ட தீமையொ டிரக்கமென்
சென்மத்து நானறிகி லேன்
சீலமொடு தவவிரத மொருசனவி லாயினுந்
தெரிசனங் கண்டு மறியேன்
பொய்த்தமொழி யல்லான் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர்கேட் கவே
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருள்
பொருந்திடாப் பேதை நானே
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
வவனிமிசை யுண்டோ சொலா
யண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே.

சுகவாரி

17. இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதே
னென்னருசித் திடவலிய வந்
தின்பங்கொ டுத்தநினை யெந்நேர நின்னன்ப
ரிடையரு துருகி நாடி
உன்னிய கருத்தவிழ வுரைகுளறி யுடலெங்கு
மோய்ந்தயர்ந் தவச மாகி
யுணர்வரிய பேரின்ப வனுபூதி யுணர்விலே
யுணர்வார்க ளுள்ள படிகாண்
கன்னிகை யொருத்திசிற் றின்வம்வேம் பென்னினுங்
கைக்கொள்வள் பக்கு வத்திற்
கணவனருள் பெறின்முனே சொன்னவா றென்னெனக்
கருதிநகை யாவ ளதுபோற்
சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை
தோற்றிற் சுகாரம்ப மாஞ்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவா ரியே.

18. அன்பின்வழி யறியாத வென்னைத் தொடர்ந்தென்னை
யறியாத பக்கு வத்தே
யாசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்துநா
னற்றே னலந்தே னென
என்புல மயங்கவே பித்தேற்றி விட்டா
யிரங்கியொரு வழி யாயினு
மின்பவெள மாகவந் துள்ளங் களிக்கவே
யெனைநீ கலந்த துண்டோ
தன்பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு
தண்முளை தனக்கு முண்டோ
தமியனேற் கிவ்வண்ணந் திருவுள மிரங்காத
தன்மையாற் றனியி ருந்து
துன்பமுறி னெங்ஙனே யறியாத நின்னன்பர்
சுகம்வந்து வாய்க்கு முறையாய்
சுந்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவா ரியே.

19. கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென்
கன்னெஞ்ச முருக விலையே
கருணைக் கிணங்காத வன்மையையு நான்முகன்
கற்பிக்க வொருக டவுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு
வழக்குக் கிழுக்கு முண்டோ
வானமாய் நின்றின்ப மழையா யிறங்கியெனை
வாழ்விப்ப துன்ப ரங்காண்
பொல்லாத சேயெனிற் றாய்தள்ள னீதமோ
புகலிடம் பிறிது முண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலு
புன்மையே னவ னந்தோ [மாய்ப்
சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா விருக்க வருளாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதி யேசுக வாரியே.

எங்குநிறைகின்ற பொருளே

20. வேதமுட னாகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைக ளெல்லா
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா யெடுத்து ரைக்கும்
ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
யுண்டுபணு ஞான மாகும்
ஊகமனு பவம்வசன மூன்றுக்கு மொவ்வுமீ
துபயவா திகள் சம்மதம்
ஆதலி னெனக்கினிச் சரியையா திகள்போது
மியாதொன்று பாவிக்க நா
னதுவாத லானுன்னை நானென்று பாவிக்கி
னத்துவித மார்க்க முறலாம்
ஏதுபா வித்திடினு மதுவாகி வந்தருள்செ
யெந்தைநீ குறையு முண்டோ
விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே.

21. காகமான துகோடி கூடிநின் றாலுமொரு
கல்லின்முன் னெதிர்நிற்கு மோ
கர்மமா னவைகோடி முன்னேசெய் தாலுநின்
கருணைப் பிரவாக வருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லவோ
தமியனேற் கருட்டாக மோ
சற்றுமில்லை யென்பதுவும் வெளியாச்சு வினையெலாஞ்
சங்கேத மாய்க் கூடியே
தேகமா னதைமிகவும் வாட்டுதே துன்பங்கள்
சேராமல் யோக மார்க்க
சித்தியோ வரவில்லை சகசநிட் டைக்குமென்
சிந்தைக்கும் வெகுதூ ரநான்
ஏகமாய் நின்னோ டிருக்குநா ளெந்தநா
ளிந்நாளின் முற்று றாதோ
விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே.

சச்சிதானந்த சிவம்

22. பாகத்தினாற் கவிதை பாடிப் படிக்கவோ
பத்திநெறி யில்லை வேத
பாராய ணப்பனுவல் மூவர்செய் பனுவலது
பகரவோ விசையு மில்லை
யோகத்தி லேசிறிது முயலவென் றாற்றேக
மொவ்வாதி யூண் வெறுத்தா
லுயிர்வெறுத் திடலொக்கு மல்லாது கிரியைக
ளுபாயத்தி னாற்செய்ய வோ
மோகத்திலே சிறிது மொழியவில்லை மெய்ஞ்ஞான
மோனத்தி னிற்க வென்றால்
முற்றாது பரிபாக சத்திக ளநேகநின்
மூதறிவி லேயெ ழுந்த
தாகத்தி லேவாய்க்கு மமிர்தப்ர வாகமே
தன்னந் தனிப்பெ ருமையே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே.

23. இனியே தெமக்குனருள் வருமோ வெனக்கருதி
யேங்குதே நெஞ்ச மையோ
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே
அநியாய மாயிந்த வுடலைநா னென்றுவரு
மந்தகற் காளாக வோ
வாடித் திரிதுநான் கற்றதுங் கேட்டது
மவலமாய்ப் போதல் நன்றோ
கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
கந்தமூ லங்க ளேனுங்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனி யாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாத தோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே.

தேசோமயானந்தம்

24. மருமலர்ச் சோலைசெறி நன்னீழன் மலையாதி
மன்னுமுனி வர்க்கே வலாய்
மந்த்ரமா லிகைசொல்லு மியமநிய மாதியா
மார்க்கத்தி னின்று கொண்டு
கருமருவு காயத்தை நிர்மலம தாகவே
கமலா சனாதி சேர்த்துக்
காலைப் பிடித்தனலை யம்மைகுண் டலியடிக்
கலைமதியி னூடு தாக்கி
உருகிவரு மமிர்தத்தை யுண்டுண் டுறங்காம
லுணர்வான விழியை நாடி
யொன்றோ டிரண்டெனுஞ் சமரச சொரூபசுக
முற்றிடவென் மனதின் வண்ணந்
திருவருண் முடிக்கவித் தேகமொடு காண்பனோ
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந் தமே.

25. தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்ட மிதிலோ
சந்தேக மில்லைமணி மடமா ளிகைமேடை
சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்திரசா லக்கோலம்
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சையி லாத கனவே
எந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லா விடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந் தமே.

தாயுமானார் பராபரக்கண்ணி

ஏராருந் தெய்வத் திருவருளாம் பூமிமுதற்
பாராதி யாண்ட பதியே பராபரமே. 1

கண்ணாரக் கண்டோர் கருப்பொருள்கா ணாமலருள்
விண்ணாரடி ருந்தவின்ப வெற்பே பராபரமே. 2

சிந்தித்த வெல்லாமென் சிந்தையறிந் தேயுதவ
வந்த கருணை மழையே பராபரமே. 3

ஆரறிவா ரென்ன வனந்தமறை யோலமிடும்
பேரறிவே யின்பப் பெருக்கே பராபரமே. 4

உரையிறந்த வன்பருளத் தோங்கொளியா யோங்கிக்
கரையிறந்த வின்பக் கடலே பராபரமே 5

எந்திக்குந் தானாகி யென்னிதயத் தேயூறித்
தித்திக்கு மானந்தத் தேனே பராபரமே. 6

அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே யிறையே பராபரமே. 7

வானமெல்லாங் கொண்ட மவுனமணிப் பெட்டகத்துக்
கானபணி யான வணியே பராபரமே. 8

ஓடு மிருநிதியு மொன்றாகக் கண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே. 9

சித்த நினைவுஞ் செயுஞ்செயலு நீயெனவாழ்
உத்தமர்கட் கான வுறவே பராபரமே. 10

போதாந்தப் புண்ணியர்கள் போற்றிசய போற்றியெனும்
வேதாந்த வீட்டில் விளக்கே பராபரமே. 11

முத்தாந்த வீதி முளரிதொழு மன்பருக்கே
சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே. 12

சொல்லா லடங்காச் சுகக்கடலில் வாய்மடுக்கின்
அல்லாலென் னாக மறுமோ பராபரமே. 13

பாராயோ வென்னைமுகம் பார்த்தொருகா லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே. 14

ஓயாதோ வென்கவலை யுள்ளேயா னந்தவெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே. 15

கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலவெனக்
கென்றிரங்கு வாய்கருணை யெந்தாய் பராபரமே 16

ஈனந் தருமுடல மென்னதியா னென்பதற
ஆனந்தம் வேண்டி யலந்தேன் பராபரமே. 17

என்புருகி நெஞ்ச மிளகிக் கரைந்துகரைந்
தன்புருவாய் நிற்க வலந்தேன் பராபரமே. 18

கற்றவறி வாலுனைநான் கண்டவன்போற் கூத்தாடிற்
குற்றமென்றென் னெஞ்சே கொதிக்கும் பராபரமே 19

வஞ்சனையும் பொய்யுமுள்ளே வைத்தழுக்கா றாயுற்றும்
நெஞ்சனுக்கு முண்டோ நெறிதான் பராபரமே. 20

எத்தனைதான் சன்மமெடுத் தெத்தனைநான் பட்டதுயர்
அத்தனையும் நீயறிந்த தன்றோ பராபரமே. 21

கண்ணுவா ரேனுமுனைக் கைகுவியா ராயினந்த
மண்ணுவார் நட்பை மதியேன் பராபரமே. 22

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சைபராபரமே, 23

வாயினாற் பேசா மவுனத்தை வைத்திருந்துந்
தாயிலார் போலுன் தளர்ந்தேன் பராபரமே. 24

எவ்வுயிரு மென்னுயிர்போல் எண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே. 25

எப்பொருளும் நீயெனவே எண்ணிநான் தோன்றாத
வைப்பையறி யாநிலையா வையாய் பராபரமே. 26

சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணமென்
றெம்மா லறிதற் கெளிதோ பராபரமே; 27

வித்தன்றி யாதும் விளைவதுண்டோ நின்னருளாந்
சித்தன்றி யாங்களுண்டோ செப்பாய் பராபரமே; 28

ஆங்கார மற்றுன் அறிவான வன்பருக்கே
தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே: 29

கண்மூடிக் கண்விழித்துக் காண்பதுண்டோ நின்னருளாம்
விண்மூடி னெல்லாம் வெளியாம் பராபரமே. 30

பாரகமும் விண்ணகமும் பற்றாக நிற்பதருட்
டாரகத்தைப் பற்றியன்றோ சாற்றாய் பராபரமே; 31

என்னறிவும் யானுமென தென்பதுவு மாமிவைகள்
நின்னவையே அன்றோ நிகழ்த்தாய் பராபரமே. 32

என்போ லெளியவரும் எங்கெங்கும் பார்த்தாலும்
உன்போல் வலியவரு முண்டோ பராபரமே. 33

செப்புவதெல் லாஞ்செபநான் சிந்திப்ப தெல்லாநின்
ஒப்பில் தியானமென வோர்ந்தேன் பராபரமே. 34

ஆரிருந்தென் னார்போயென் னாரமுதா நின்னருளின்
சீர்இருந்தால் உய்வேன் சிவமே பராபரமே.

எந்தப் படியுன் னிதய மிருந்ததெமக்
கந்தப் படிவருவ தன்றோ பராபரமே. 36

எந்தெந்த தாளும் மெனைப்பிரியா தென்னுயிராய்ச்
சிந்தைகுடி கொண்டவருட் டேவே பராபரமே. 37

சுட்டியுணா ராமல் துரியநிலை யாய்வெளியில்
விட்டநின்னை யானோ வியப்பேன் பராபரமே. 38

எண்டிசைகீழ் மேலான வெல்லாம் பெருவெளியாக்
கண்டவிடத் தென்னையுநான் கண்டேன் பராபரமே 39

விரிந்த மனமொடுங்கும் வேளையினா னுகைப்
பரந்தஅருள் வாழி பதியே பராபரமே. 40

சிந்தனைபோய்நானெனல்போய்த் தேக்கவின்பமா மழை
வந்து பொழிந்ததனை நீ வாழி பராபரமே: [யை

மண்ணும் விண்ணும் வந்து வணங்காவோ நின்னருளைக்
கண்ணுறவுட் கண்டவரைக் கண்டாற் பராபரமே. 42

என்றும் கருணைபெற்ற இன்பத் தபோதனர்சொற்
சென்றசென்ற திக்கனைத்தும் செல்லும் பராபரமே. 43

ஏறுமயிற் பால முணர்விந்தவிட யங்கள்நெருப்
பாறெனவும் நன்றாவறித்தேன் பராபரமே. 44

பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யெனவே மெய்யறிவை
மெய்யெனவே மெய்யுடனே காண்பேனோ. 45

சட்டைஒத்த இவ்வுடலைத் தன்னுமுன் னேநான்சகச
நிட்டையைப் பெற்றையா நிர்விகற்பங் காண்பேனோ. 46

தக்கரவி கண்ட சரோருகம்போல் என்னிதயம்
மிக்கஅருள் கண்டு விகசிப்ப தென்னாளோ. 47

எட்டத் தொலையாத எந்தைபிரான் சன்னிதியில்
பட்டப் பகல்விளக்காய்ப் பண்புறுவ தென்னாளோ: 48

ஓடுங் கருத்தொடுங்க உள்ளுணர்வு தோன்றநினைக்
கூடும் படிக்கிறைநீ கூட்டிடவுங் காண்பேனோ. 49

மண்ணும் மறிகடலும் மற்றுமுள வெல்லாம்உன்
கண்ணில் இருக்கவுந்தான் கண்டேன் பராபரமே, 50

எனக்கினியான் உன்போலு மில்லையென்றால் நானு
உனக்கினி யானாகா உளவேன் பராபரமே: 51

உணர்ந்து முனைநாடா உணர்ந்தவையே நாடும்
இணக்கமுறு மேழமைதான் என்னே பராபரமே. 52

வன்பொன்று யாரு மனமிளப்ப மாறுப்பேர்
அன்பொன்றும் போதுமெமக் கையா பராபரமே: 53

மோனந் தருஞான மூட்டி என்வேட்டா
ஆனந்த வாழ்க்கை அருளாய் பராபரமே. 54

சித்தமவனஞ் செயுஞ்செயலெ லாமவனஞ்
சுத்தமவன மென்பால் தோன்றிற் பராபரமே; 55

தானும் பொறிவழியை நாடாத வண்ணமெமை
ஆளும் பொறியால் அருள்வருவ தெந்நாளே. 56

மனமான வானரக்கைம் மாலையா காமர்
எனையாள் அடிகளடி யெய்துநாள் எந்நாளோ. 57

வேட்டைப் புலப் புலையர்மேவாத வண்ணமனக்
காட்டைத் திருத்திக் கரைகாண்ப தெந்நாளோ. 58

உந்துபிறப் பிறப்பை யுற்றுவிடா தெந்தையருள்
வந்துபிறக்க மனமிளப்ப * தெந்நாளே. 59

ஆங்கார மென்னுமத யானைவா யிற்கரும்பாய்
ஏங்காம லெந்தையரு ளெய்துநாள் எந்நாளோ. 60

பொல்லாத காமப் புலைத்தொழிலில் என்னறிவு
செல்லாமல் நன்னெறியிற் சேருநாள் எந்நாளோ. 61

உள்ளத்தி னுள்ளேதா னூறுஞ் சிவானந்த
வெள்ளந் துளைத்து விடாய்தீர்வ தெந்நாளோ. 62

தீங்கரும் பென்றுலிவியா இன்றுலிவிப் பனபோற்
பாங்குறும் பேரின்பம் படைக்குநா ளெந்நாளோ. 63

---

* நினைப்பு மறப்புற்றிருத்தல்-மனம் சும்மா இருத்தல். இதுதான் மவுனநிலை தியானிப்பவனும் தியானிக்கும் சிவமும் ஐக்கியப்பட்ட நிலை. பூதம் முதல் நாதம் வரை பொய்யென்ற மெய்யருக்குத் தான் மனம் உலக ஆசையற்று ஒடுங்கும். "ஆசாதிகளும் துகளாகிய பின்பேசா அநுபூதி பிறந்ததுவே.
— அருணகிரியார்.

பைங்கிளிக் கண்ணி

ஆவிக்குள் ஆவியெனும் அற்புதனார் சிற்சுகந்தான்
பாவிக்குக் கிட்டுமோ சொல்லாய்நீ பைங்கிளியே; 1

ஆருமறி யாமலெனை அந்தரங்க மாகவந்து
சேரும் படியிறைக்குச் செப்பிவா பைங்கிளியே. 2

ஆறான கண்ணீர்க்கென் னங்கபங்க மானதையுங்
கூறாத தென்னோ குதலைமொழிப் பைங்கிளியே. 3

இன்பருள ஆடையழுக் கேறுமெமக் கண்ணல்சுத்த
அம்பரமா மாடை யளிப்பாரோ பைங்கிளியே. 4

ஊருமிலார் பேருமிலார் உற்றார்பெற் றாருடனே
யாருமிலார் என்னை அறிவாரோ பைங்கிளியே. 5

ஊரைப்பா ராமலெனக் உள்அகத்து நாயகனார்
சீரைப்பார்த் தாற்கருணை செய்வாரோ பைங்கிளியே; 6

என்று விடியு மிறைவாவோ வென்றென்று
நின்றநிலை யெல்லா நிகழ்த்தாய்நீ பைங்கிளியே; 7

எந்தமட லூடும் எழுதாத இறைவடிவைச்
சிந்தைமட லாலெழுதிச் சேர்ப்பேனோ பைங்கிளியே. 8

கண்ணுண்மணி போல்இன்பங் காட்டியெ னைப்பிரிந்த
இன்னணியரு மின்னெம்வந்து சேர்வாரோ பைங்கிளியே. 9

ஏடார் மலர்சூடே னெம்பெருமான் பொன்னடியாம்
வாடா மலர்முடிக்கு வாய்க்குமோ பைங்கிளியே. 10

கல்லேன் மலரேன் கனித்தவன்பே பூசையென்ற
நல்லோர்போல் வாவெனையுநாடுவரோ பைங்கிளியே 11

காணாத காட்சி கருத்துவந்து காணுமன்
வீணாள் கழித்து மெலிவேனோ பைங்கிளியே. 12

காந்த மிரும்பைக் கவர்ந்திழுத்தா லென்னவருள்
வேந்த னெமையிழுத்து மேவுவனோ பைங்கிளியே. 13

கிட்டுராய் நெஞ்சிற் கிளர்வார் தழுவவென்றால்
நிட்டுர ராவரவர் நேசமென்னோ பைங்கிளியே. 14

சிந்தை மருவித் தெளிவித் தெனையாள
வந்தகுரு நாதனருள் வாய்க்குமோ பைங்கிளியே. 15

தற்போதத் தாலே தலைகிழ தாகவையன்
நற்போத வின்புவர நாட்செல்லுமோ பைங்கிளியே 16

தாவியதோர் மர்க்கடமாந் தன்மைவிட்டே யண்ணலிடத்
தோவியம்போ னிற்கினெனை யுள்குவரோ பைங்கிளியே 17

தொல்லைக் கவலை தொலைத்துத் தொலையாத
எல்லையிலா வின்பமய மெய்துவனோ பைங்கிளியே. 18

நானே கருதின்வர நாடார்சும் மாவிருந்தாற்
தானே யணைவரவர் தன்மையென்னே பைங்கிளியே. 19

நெஞ்சகத்தில் வாழ்வார் நினைக்கின்வே றென்றனையார்
வஞ்சகத்தா ரல்லரவர் மார்க்கமென்னோ பைங்கிளியே 20

பாசபந்தஞ் செய்ததுன்பம் பாராம லெம்மிறைவர்
ஆசைதந்த துன்பமதற் காற்றேனன் பைங்கிளியே, 21

பாராசை யற்றிறையைப் பற்றறநான் பற்றிநின்ற
பூராய மெல்லாம் புகன்றுவா பைங்கிளியே. 22

மேவுபஞ்ச வண்ணமுற்றாய் விண்சிறையா லல்லலுற்றாய்
பாவிபஞ்ச வண்ணம் பகர்ந்துலா பைங்கிளியே, 23

உள்ளத்தி னுள்ளே யொளிந்திருந்தென் கள்ளமெல்லாம்
வள்ளலறிந் தாலெனக்கு வாயுமுண்டோ பைங்கிளியே. 24

ஆகத்தை நீக்குமுன்னே யாவித் துணைவரைநான்
தாகத்தின் வண்ணந் தழுவுவனோ பைங்கிளியே: 25

கள்ளத் தலைவரவர் கைகாட்டிப் பேசாமல்
உள்ளத்தில் வந்த வுபாயமென்னோ பைங்கிளியே; 26

ஆனந்தக் களிப்பு

அருளால் எவையும் பாரென்றான் - அத்தை
அறியாதே சுட்டியென் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால் - கண்ட
என்னையுங் கண்டிலன் என்னடி தோழி
சங்கர சங்கர சம்பு.

என்னையுந் தன்னையும் வேறா - உள்ளத்
தெண்ணாத வண்ணம் இரண்டற நிற்கச்
சொன்னது மோவொரு சொல்லே - அந்த
சொல்லால் விளைந்த சுகத்தையென் சொல்வேன்
சங்கர சங்கர சம்பு.

விளையுஞ் சிவானந்த பூமி - அந்த
வெட்ட வெளிநண்ணித் துட்ட விருளாம்
களையைக் களைந்துபின் பார்த்தேன் — ஐயன்
களை (கலாப்பிரபை) யன்றிவேறொன்றுங்கண்டிலன்தோழி
சங்கர சங்கர சம்பு.

தாக்குநல் லானந்த சோதி - அணு
தன்னிற் சிறிய வெனைத்தன் னருளால்
போக்கு வரவற் றிருக்கும் - சுத்த
பூரண மாக்கினான்! புதுமைகாண் மின்னே
சங்கர சங்கர சம்பு.

மன்னிப்பு வேண்டல்

கல்லாப் பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின்னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந்துதியாப்பிழையுந்தொழாப்பிழையும்
எல்லாப்.பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே

பொல்லாத வன்நெறி நில்லாத வன்ஐம் புலன்கடமை
வெல்லாத வன்கல்விகல்லாதவன்மெய் யடியவர்பால்
சொல்லாதவன் உண்மை சொல்லாதவன் நின்திருவடிக்கன்பு
இல்லாதவன் மண்ணில் ஏன்பிறந் தேன்கச்சியேகம்பனே.

வரம வேண்டல்

ஐயுந்தொடர்ந்து விழியுஞ்சொருகி அறிவழிந்து
மெய்யும் (தேகமும்) பொய்யாகி (உயிர்போதல்
விடுகின்றபோது ஒன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையிர்திருநீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி § ஐந்தெழுத தோதவுங்
கற்பியுமே.

---

§ மரணப்படுக்கையில் அறிவுகெடமுன் எதை ஒருவர் பலமாய் நினைக்கிறாரோ அவ்வெண்ணத்தைப் பொறுத்துளது அன்னவரின் அடுத்தபிறப்பு அந்நேரத்தில் கடவுளே தஞ்சமென்று அவரின் திருநாமமாகிய ஐந்தெழுத்தை ஓதி உலக ஆசை அற்றுத் தொழுபவர் நல்ல கதியை அடைவர். தனது ஜீவியகாலத்திலே கடவுளைக் கும்பிட்டு அவரின் அருளை நாடிக்கிடவாதவனுக்கு இறக்குந் தருணத்தின் இறைவனை நினைக்க மனம் வருவது கஷ்டத்தில் கஷ்டம். இதனாற்றான் பட்டினத்தடிகளும் தமது பாடலைத் தொடங்குமுன் ''நினைமின் மனனே நினைமின் மனனே சிவபெரு மானைச்செம்பொன்னம்பல

''இருவினையும் மும்மலமுமற. இறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயும் நானுமாய்
இறுகும் (ஐக்கியப்படும்) வகை அதனை அருள்இடைமருதில்
ஏகநாயகா லோகநாயகா தேவர்கள் பெருமாளே''

— அருணகிரிநாதர்

வாழ்த்து

''வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்கக் குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

''பத்தர் சித்தர்வாழ் பரிபக்குவர் கள்வாழி செங்கோல்
வைத்தவர்கள் வாழி குருவாழி பராபரமே.''

—தாயுமானவர்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

---

§ வனை நினைமின் மனமே நினைமின் மனமே.'' என்று அருளியது. அம்பலம்-உன்னுவெளியாய் உறங்காத அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமான பேரறிவு-தகராகாசம்-சிதம்பரம் இது அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரஞ் செய்யும் போது வேண்டப்பட வேண்டியது.

தாயுமான சுவாமிகளின்
அடியனான

காரைநகர்
16-1-66

மு. கு. சுப்பிரமணியம்

மலைவளர் காதலி

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கண் மித்திரர்கள்
பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரெனுந் திமிரமணுகாக்
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதிருண்டு
காயசித் திகளுமுண்டு
கறையுண்ட கண்டர்பா லெம்மைநின் றுளிற்
கருத்தொன்று முண்டாகுமேல்
நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞானவா னந்தவொளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நானெனு மகந்தை தீர்த்தென்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே
மதுரு தனன் றங்கையே
வரைரா சனுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெணுமையே.

தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே
சிற்றிடையி லேநடையிலே
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே
சிறுபிறை நுதற்கீற்றிலே
பொட்டிலே யவர்கட்டு பட்டிலே புனைகந்த
பொடியிலே யடியிலேமேற்
பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே
புந்திதனை நுழையவிட்டு
நெட்டிலே யலையாம லறிவிலே பொறையிலே
நின்னடியர் கூட்டத்திலே
நிலைபெற்ற வன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான
ஞேயத்தி லேயுனிருதாள்
மட்டிலே மனதுசெல நினதருளு மருள்வையோ
வளமருவு தேவையரசே
வரைரா சனுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெணுமையே.

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகியெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சஹஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சத்தியென்றுன்
னாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச் சரிக்கவசமோ
ஆரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ
அகிலாண்ட கோடியீன்ற
வன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசு
மானந்த ரூபமயிலே
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவையரசே
வரைரா சனுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெணுமையே.

பூதமொடு பழகிவள ரிந்திரிய மாம்பேய்கள்
புந்திமுத லானபேய்கள்
போராடு கோபாதி ராக்ஷசப் பேய்களென்
போதத்தை யூடழித்து
வேதனை வளர்த்திடச் சதுர்வேத வஞ்சன்
விதித்தானி வல்லவெல்லாம்
விழும்படிக்குனது மௌனமந் தராதிக்ய
வித்தையை வியந்தருள்வையோ
நாதவடி வாகிய மஹாமந்த்ர ரூபியே
நாதாந்த வெட்டவெளியே
நற்சமய மானபயிர் தழையவரு மேகமே
ஞானவா னந்தமயிலே
வாதமிடு பரசமயம் யாவுக்கு முணர்வரிய
மகிமைபெறு பெரியபொருளே
வரைரா சனுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெணுமையே.

தன்னை யொருவர்

தன்னை யொருவர்க் கறிவரிதாய்த்
தானே தானா யெங்குநிறைந்
துன்னற் கரிய பரவெளியா
யுலவா வமுதா யொளிவிளக்காய்
யென்னுட் கலந்தா யானறியா
திருந்தா யிறைவா வினியேனும்
நின்னைப் பெறுமா றெனக்கருளா
நிலையைக் கொடுக்க நினையாயோ;

நினையு நினைவுக் கெட்டாத
நெறிபெற் றுணர்ந்த நெறியாளர்
வினையைக் கரைக்கும் பரம வின்ப
வெள்ளப் பெருக்கே நினதருளால்
மனைவி புதல்வ ரன்னைபிதா
மாடு வீடென் றிடுமயக்கந்
தனையு மறந்திங் குனைமறவாத்
தன்மை வருமோ தமியேற்கே;

வரும்போ மென்னு மிருநிலைமை
மன்னா தொருதன் மைத்தாகிக்
கரும்போ தேனோ முக்கனியோ
வென்ன வென்னுட் கலந்துநலந்
தரும்பே ரின்பப் பொருளேநின்
றன்னை நினைந்து நெக்குருகேன்
இரும்போ கல்லோ மரமோவென்
னிதய மியாதென் றறியேனே;

அறியுந் தரமோ யானுன்னை
அறிவுக் கறிவாய் நிற்கையினுஞ்
பிறியுந் தரமோ நீயென்னைப்
பெம்மா னேபே ரின்பமதாய்ச்

செறியும் பொருணீ நின்னை யன்றிச்
செறியாப் பொருளென் பெரும்பேற்றை
நெறிநின் றொழுக விசாரித்தால்
நினக்கோ வில்லை யெனக்காமே;

எனதென் பதும்பொய் யானெனல்பொய்
யெல்லா மிறந்த விடங்காட்டும்
நினதென் பதும்பொய் நீயெனல்பொய்
நிற்கு நிலைக்கே நேசித்தேன்
மனதென் பதுமோ வென்வசமாய்
வாரா தைய நின்னருளோ
தனதென் பதுக்கு மிடங்காணேன்
றமியே னெவ்வா றுய்வேனே;

உய்யும் படிக்குன் றிருக்கருணை
யொன்றைக் கொடுத்தா லுடையாய்பாழும்
பொய்யு மவாவு மழுக்காறும்
புடைபட் டோடு தன்னெறியாம்
மெய்யு மறிவும் பெரும்பேறும்
விளங்கு மெனக்கு னடியார்பாற்
செய்யும் பணியுங் கைகூடும்
சிந்தைத் துயருந் தீர்ந்திடுமே.

சிந்தைத் துயரென் றொருபாவி
சினந்து சினந்து போர்முயங்க
நிந்தைக் கிடமாய்ச் சகவாழ்வை
நிலையென் றுணர்ந்தே நிற்கின்றேன்
எந்தப் படியுன் னருள்வாய்க்கு
மெனக்கெப் படிநீ யருள்செய்வாய்
பந்தத் துயரற் றவர்க்கெளிய
பரமா னந்தப் பழம்பொருளே.

பொருளைப் பூவைப் பூவையரைப்
பொருளென் றெண்ணு மொருபாவி
இருளைத் துறந்திட் டொளிநெறியை
யென்னுட் பதிப்ப தென்றுகொலோ
தெருளத் தெருள வன்பர்நெஞ்சந்
தித்தித் துருகத் தெவிட்டாத
அருளைப் பொழியுங் குணமுகிலே
யறிவா னந்தத் தாரமுதே;

ஆரா வமிர்தம் விரும்பினர்க
ளறிய விடத்தை யமிர்தாக்கும்
பேரா னந்தச் சித்தரெனும்
பெரியோ யாவிக் குரியோய்கேள்
காரார் கிரக வலையினிடைக்
கட்டுண் டிருந்த கலைகளெல்லாம்
ஊரா லொருநாட் கையுணவேற்
றுண்டா லெனக்கிங் கொழிந்திடுமே.

எனக்கென் றிருந்த வுடல்பொருளும்
யானு நினவென் றீந்தவண்ணம்
அனைத்து மிருந்து மிலதாக
வருளாய் நில்லா தழிவழக்காய்
மனத்துட் புகுந்து மயங்கவுமென்
மதிக்குட் களங்கம் வந்ததென்னே
தனக்கொன் றுவமை யறநிறைந்த
தனியே தன்னந் தனிமுதலே;

பதவிளக்கம்

தத்துவசாஸ்திரம் பதி, பசு, பாசம்-ஆணவம், கன்மம், மாயை, இறப்புப் பிறப்பு, பந்தம் மோட்சம் என்பன வற்றை விளக்கும், துவைத, அத்துவித அருள்நூல்கள். "வேதமுடன் ஆகமம் என்ற பாடலைக் கவனிக்கவும்.

சமயம் மேற்சொன்ன சைவ உண்மைகளை அநுபூதியால் அறியும் வழி. இது இந்நூல் முகப்பில் தரப்பட்டுள.

அத்துவிதம் —ஏகான்மவாதம்:- ஆன்மாவுஞ், சிவமும் நீக்கமுடியாத ஒன்று என விளக்கும் வேதாந்தநெறி.

துவிதம் —சிவாத்மாவும், பராத்மாவும் வெவ்வேறானவை என்ற விளக்கத்தை உடைய சைவநெறி. துவித நெறி, வேதாந்த நெறிக்குச் சோபனமாய் (படியாய்) உள்ளது. தாயுமான சுவாமிகள் இவ்விரு நெறியையுஞ் சமரசப்படுத்திய வேதாந்த சித்தாந்த சமரசி.

"வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்
தாதாந்த மோன நவனே பராபரமே"

என்னும் பாடலையும் பிறபாடல்களையும் இதில் கண்டு கொள்க.

"அறிவு வடிவென் றறியாத என்னை
அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி (சிவம்)

அறிவு வடிவென் றருளால் அறிந்தே
அறிவு வடிவென் றறிந்திருந்தேனே."

— திருமூலர்

மந்திரம் மன்-நினைத்தல். திராணமென்னும் பத அடியாய் வந்த, திரா-சமுசார-இறப்புப்பிறப்பு, வயோதி

பம், நோய், துன்பம்; பந்ததொந்தத்தில் இருந்து விடுதலை அடைவது. மந்திரமென்றால், '':நினைப்புச் சக்தியால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தத்தைப் பெறுவது'' என்னும் கருத்தை உடையது.

ஒரு மந்திரத்தில் உறங்காத பெரும் அறிவு அடங்கி உள. அது சாதகனுக்கு உள் ஒளியையும், ஆன்ம சுதந்திரத்தையும், பெருஞ் சமாதானத்தையும், முடிவற்ற இன்பத்தையும், அழிவின்மையையும் கொடுக்கும். இடைவிடாது ஒரு மந்திரத்தை ''அவர்தரு நினைவுகளை'' நீக்கி உருவேற்றினால், அது கடவுளின் திருவருளாகிய மூன்றாவது துரியக்கண்ணைத் தரும் பேருணர்வு,

பக்கம்	சொல்	கருத்து
1	வாயுற ஆயும்	ஆராயும்-கேட்டல் சிந்தித்தல், தெளிதல், அனுபூதி.
	வேதாகமம்	வேதம்–சாமம், அதர்வணம், இருக்கு, யசுர். இவற்றின் சாரம் உபநிடதங்கள் இது அத்துவ நெறி. ஆகமம் சாதனை நூல், துவிதமார்க்கம்.
	பதத்தினென்றும்	பேரின்பத்தில் ஐக்கியப்படுதல்.
	அனுபவத்தில்	அரிய அனுபவத்தால்
	பராவு சின்மயமாகி	புகழ்ந்து துதிக்கக் கூடிய பரிபூரண நிலைபெற்று
	பரி	குதிரை
	நிராமயதேயத்தேகி	பிறப்பு, வயோதிபக் நோய், இறப்பு அற்ற
	வெல்வாம்	ஆணவம், கன்மம், மாயையை வெல்வோமாக
2	அங்குல்பகலற்ற	மறத்தல் நினைத்தல் அற்ற
	மோனவுரு	வான மெல்லாங் கொண்ட மௌனமணிப்பெட்டகத்துக்கான பணி.
	சிற்சக்தி	ஞான அருள் செய்யுஞ் சத்தி
	கார்	முகில் கூட்டம்
	துரிய வடிவு	துரிய நிறைவு-பேரறிவு
3	ஆணை செல	வேற்றாரைப் பிடித்து வெற்றி கொள
	அளகேசன்	குபேரன்
	ரசவாதம்	இரும்பைப் பொன்னாக்குதல்.

பக்கம்	சொல்	கருத்து
3	காயகல்பம்	உடல் நீடித்த காலம் இருக்கச்செய்யும் மருந்து
	மனதற்ற	நினைப்பு மறப்பற்ற
	சங்கர	சுகத்தைக் கொடுப்பவர்
	சுயம்புவே	தான் தோன்றி
	சம்புவே	பரமபிதா. சுகோதயத்துக்கு இருப்பிடம்
	துங்கமிகு பக்குவ	மகாபரிபக்குவிகளாகிய
	ஒருசொல்லால்	"சும்மாவிரு" என்ற
	உணர்த்தி	சொல்லால் உணர்த்தி. அந்தகரணம் அடங்கிய இடம். சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரண நிலை.
	சொரூபானுபூதி	பேரின்ப சொரூபம்-தக்ஷிணாமூர்த்தம்
4	அத்துவித	துரிய நிலை
	சரியை	தொண்டு செய்தல், அற ஒழுக்க நெறி நிற்றல், ஒழுக்கம் சமய நெறிக்கு அடிப்படையாகும்,
	கிரியை	சிவபூசை, இடைவிடாது சிவநாமத்தை உச்சரித்தல்,
	யோகம்	அட்டாங்க சிவயோகம், இதய மலர்மிசை,

வசிக்கும் சிவத்தை உள்முகமாய் "உன்னை நானென்று பாவிக்கின் அத்துவிதமார்க்கமுறலாம்" என்ற உண்மைபடி நான் தெய்வமென்று உபாசித்தல் – தியானித்தல் ஒடுங்கருத்தை ஒடுக்கி.

4.	ஞானம்	அநுபூதி. மனமிறந்த கடவுளுணர்ச்சி
	திணைக்க	நி ் ம்ப
	அகண்டிதாகாரமாய்	நினைக்க முடியாத ஞ்ா ன வ் உருவாய்
5.	திகளும்	விலங்கு
	சமரச அநுபூதி	எப்பொருளுங் நீ எனவே எண்ணி நான் தோன்று நிலை.
6	கல்லாதஅறிவு	முறையாகக் கற்கவேண்டியனவற்றை குரு மூலமாய்க் கற்றறியாமையால் ஏற்படுக் அறிவு
	கேளாத கேள்வி	காதினல் குருவினிடங் கேட்டறிதல் இல்லாத கேள்வி ஞானம்
	குரு	அஞ்ஞான இருளை நீக்கிச் சிவபோதம் உண்டாக அருள்புரிபவர். குரு வேறு சிவன்வேறல்ல.
7	நன்னேன்	மனந்துணியேன்
	கேள்வியாப்பூமிக்குள் வித்தே	கேள்வியாகிய இடத்தில் நிறைந்து நின்ற விதை முதலே–வித்துக்கு வித்தான விதை முதலே
	அவ்வித்தின் முளையே	விண்ணுக்கும் மண்ணுக்கும் பற்று நிற்கும் அருட்தாரகமான பரஒளியே
	கருத்தே	மன நினைவே
	எண்ணே	தருக்காதிகளே. சுருதி, யுக்தி, அநுபவம் என்னும் அளவைகளாலும் ஆராய்ந்து பொருள்நிட்சயஞ்செய்ய வழிகாட்டுவது
8	யோருறவும்	தெரியவும்
	பாட்டளி	இரிங்காரஞ் செய்யும் வண்டுகள்

	துதைந்த	மிகவும் ஒழுங்குற வாழும்
	கற்பகம்	தேவதரு—வேண்டிய தெல்லாந் தரும் மரம்
	பத்மநிதி	கணிக்க முடியாத வெண் பொன் (வெள்ளி) செம்பொன்—செம்பு
	சங்கநிதி	சங்குவாய் உற்ற குபேரனின்பொன்
	கோரம்	குரூரகுணம்
	மிந்திரசாலம்	அற்புதங்களைக் காட்டும் வித்தை
	அல்லாமை	குணங்களல்லாத கெட்டகுணங்கள்
	விர்தா கோஷ்டி	அகங்காரக் கூட்டம்
	உரகனு	ஆதிசேடன் ஆயிரமுகமுடையவன், இவ்வுலகத்தைச் சுமந்திருப்பவன்
	யோகதண்டத்திலே	யோகதண்ட மென்னும் ஓர்முழத் தடியினை
	வித்தகச் சித்தர்கணமே	ஞானம் வாய்ந்த சித்தாதிகணநாதரே
9	கன்னக	விசாலித்த
	ககனவட்டத்தில் நின்று	திருவருள் மயமான ஆகாச வட்டத்திலிருந்து
	மதியவசமுறவே	புத்தியானது பரவசமாமாறு
	நிலைபதியுமட்டுமே	இந்நிலையிலே
	பவுரிகுலையாமலே	கூத்துநின்று மாறுதபடி
	கௌரிகுண்டலியாயி	கௌரியாகிய குண்டலிசத்தி
	விண்ணிலவு மதியமுதம்	ஞானகாயத்தின் கண் சாசுவதமாயுள்ள சந்திரன் பால் நிறைந்திருக்கும் அமுதப்பெருக்கானது
10	மோனமாம் வித்தை	மௌன முத்திரையாம் விதை முதலை
	வன்பறவை	வேட்டைப் புலைப்புலையராகிய இந்தியச் சேட்டை
	அருட்பாரம்	என்னைக் காப்பது அருளின் கடன்

	சூதான வெளி	துரிய வெளி
	துரியமயம்	சிவசத்தி சொரூபம்
11	உன்னிய கருத்த விழ	எண்ணிய நெஞ்சமும் நெகிழ்ந்துருக
	அவசம்	பரவசப்பட்டு
12	வல்லான் வகுத்த தேவாய்க்கால்	மதிவல்லான் செய்ததே சட்டம்
	சும்மா விருக்க	நினைப்பு மறப்பற்று இருத்தல்
	ஊகம்	யுக்தி
	வசனம்	சுருதி-வேதம், ஆகமம், புராணம் ஆகிய இவையும் பிறவும்
	உபயவாதிகள்	துவித அத்துவித வாதிகள்
13	சங்கேத	ஏற்பாடாகச் சேர்ந்து
	சகசநிட்டை	சாதாரண நிட்டைக்கும்
	ஏகமாய்	சிவன் சிவத்தோடு ஐக்கியமாய்
	பாராயணப்பனுவல்	திருவாசகம் திருக்கோவையார்
	மூவர்செய் பனுவல்	மூவர் தேவாரங்கள்
	மோகத்திலே	மாயாமோக யோகாதிகள்
	மெய்ஞ்ஞான மோனத்திலே	ஞானமார்க்கமாய மௌனத்திலே
	பரிபாக சத்திகள்	பரிபாகமூல மாயா சத்திகள்
	மூதறிவிலே யெழுந்ததாகம்	என் பேரறிவிலெழுந்த ஞானதாகத்தில்
	அமிர்தம்	உயிர்தரு மருந்து
	பிரவாகம்	வெள்ளம்
14	அவலமாய்	வீணே
	கந்தமூலம்	கிழங்கு
	கனல்வாதை	பசி
	மந்திரமாலிகை	அட்டாங்க யோகநூல் மனதை அடக்கி கடவுளுடன் ஐக்கியப் படுத்த வழிகாட்டும் யோகநூல்
	இயமங்	அகிம்சை, சத்தியம் களவெடாமை, பிரமசரியம்

	தேசோமயானந்தமே	பிரகாசமயமாய் உள்ள நித்தியானந்தமே
15	வாஞ்சனை இலாத	விருப்பில்லாத
	பவுசு	திறமை
	தவிசு	நற்சயனம்
	திட்டாந்தம்	சான்று
	திமிரம்	பேரிருள்—அஞ்ஞானம்
	ஞானமாங்கதிர்	மெய்ஞ்ஞானமாய சூரியன்
	பரஞான வானந்த வொளியே	மேலான ஞான சொரூபமாகிய ஆனந்தச் சுடரே
	நாதாந்த ரூபமே	வேதாந்த போனம்
	மதுசூதனன்	மதுவென்னும் அரக்கனை அழித்ததால் விஷ்ணுவுக்கு மதுசூதனன் என்று காரண இடுகுறி
	வரைராசன்	மலை அரசன்
	தெட்டிலே	பெண்களது வஞ்சமாயத்திலே
	புந்தி	புத்தி
	பூரணி	சர்வபரிபூரணி
	புராதன சுமங்கலை	பழமையான நித்திய மங்கள சுமங்கலியுமாவாய்
	சுந்தரி	அழகி
	புராந்தகி	சிறுவனின் தேவி
	த்திரியம்பகி	முக்கண்ணுடையவர்
	யெழிற்புங்கவி	வனப்புவாய்ந்துற்ற தெய்வமாதருமாவாய்
	சிவசங்கரி	சிவந்த சங்கரிக்குத் தெய்வமுமாவாய்
	சஹஸ்ரதள புட்ப மிசை விற்றிருக்கும் நாரணி	ஆயிர இதழ்களோடு கூடிய சஹஸ்ராரத்தில் விற்றிருக்கும் விஷ்ணுவின் தங்கையுமாவாய்
	நாதாந்த சக்தி	நாததத்துவத்துக்கு அப்பாற்பட்ட பராசத்தியுமாவாய்
	வசமோ	செய்யும் வகை
	ஆரணி	கங்கை
	காரணி	வேதமாதா

பிழை திருத்தம்

முகவுரை

பக்கம்	பிழை	திருத்தம்
2	ஆன்மிக	ஆன்மீக
3	ஜகந்நாத்திலிருந்து	ஜகந்நாதத்திலிருந்து
4	அருல	அரும்
4	தேகத்துனும்	தேகத்துடனும்
,,	பேருணவு	பேருணர்வு
5	அறத்தினு	அறத்தினுங்
,,	மாக்கமு	காக்கமு
,,	குயப்பால	குயற்பால
7	அவ	அவர்
8	பிரமாவின்	பெருமானின்
9	சசிவாய	சிவாய
,,	சிறதை	சிந்தை
,,	தியானத்துக்குரிறவை	தியானத்துக்குரியவை
11	தன்னிழல்	நிழல்
,,	அரிய	அரிய
,,	சாயந்திரம்	ஜயந்திபுரம்
,,	தலங்காமம்	தலங்கம
,,	கொழும்பு	இலங்கை

முகவுரை

11	குரிறவை	குரியவை
12	சிரமேற்கொண	சிரமேற்கொண்டு
,,	தாயுமாணர்	தாயுமானர்
,,	தயாருடன்	தாயாருடன்

12	கொன்	கொண்டு
,,	தரப்பட்டுள	தரப்பட்டுளது
,,	பத்திராதிபர்	ஆசிரியர்
13	எல்லாவல்ல	எல்லாம் வல்ல
14	Hhuddhananda	Shuddhananda
,,	Bharathiiyar	Bharathiyar

திருப்பாடல்

15	படமா	மாடமா
17	புறநம்	புனறம்
,,	பறியா	அறியா
,,	அருளார்ந்	அருளாஞ்
19	பொய்புறவு	பொய்புறவும்– பொய்புடனும்
,,	எனவெட்டா	எனக்குவட்டா
20	அனைத்து	இனைத்து
22	னண்ணம்	வண்ணம்
24	சிப	சிவ

GOD SEEKETH MAN

Has it never occured to you to ask your self:-

"What am I? Why am I here? What is my destiny?"

"Think not that ye are creatures of clay. Ye are greater than your bodies, greater, than the empirical ego, the ego of appetites and desires, Ye are heirs of imperishable life. Therefore it is that you cannot rest in the finite life. The soul's spontanious gravitation is towards the Spirit. "Thou God makest us for Thyself and our hearts are restless till they rest in Thee."

Supreme speaks to man:-

"Ah! fondest, blindest, weakest,
"I am He whom thou seekest!
Thou drawest love from thee who dravest Me!"

T.L. Vaswani

Vivekananda Press, Jaffna